RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
சுவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 14 ஒக்டோபர் 2022 இதழ்:- 25

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B.
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com


## இந்தியாவில் பல முக்கிய சந்திப்புக்களை நடத்தி 13வது திருத்தத்தை வலியுறுத்திய ஜனநாயகப் போராளிகள்



ஜனநாயகப் போராளிகள் கட்சியினர், இந்தியாவில் இந்திய அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் ஆளுங் கட்சியின் பிரதிநிதி விவேக் ஆகியோருடன், சந்திப்புக்களை நடத்தியுள்ளனர். இது தொடர்பில், ஜனநாயகப் போராளிகள் கட்சி செயலாளர் இ.கதிர், கருத்து வெளியிட்டுள்ளார். பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் இலங்கையின் தற்போதைய நிலைமை, தமிழ் மக்களின் அரசியற் தீர்வு குறித்த விடயங்கள், எமது மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடினோம். (3ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## பிச்சைக்காரன் என்ற அந்தஸ்தைக் கேட்கிறதா இலங்கை! குறைந்த வருமானம் பெறும் நாடாக தரமிறக்கும் பின்னணி?



இலங்கையை மத்திய வருமானம் பெறும் நாடுகளிலிருந்து, குறைந்த வருமானம் பெறும் நாடாக தரமிறக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கின்றார். சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைய, இலங்கை மத்திய வருமானம் பெறும் நாடாக காணப்பட்டது. இந்த நிலையில், மத்திய வருமானத்தை பெற்றுக் கொள்ளும் நாடாக இலங்கை இருக்குமானால், நிவாரண அடிப்படையிலான உதவிகளை பெற்றுக் (7ம் பக்கம் பார்க்க)

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

## இவர்களுக்காக வாருங்கள்!

23 ஒக்டோபர் 2022

விபரங்கள் 10,11ம் பக்கம்



## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX
ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!


**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





18 Years Real Estate Experience


HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Lawrence / Morningside

**Scarborough** $499,800
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route


### Sheppard / Markham

**Scarborough** $449,900
Bedrooms: 2 Washrooms: 1
Beautiful Well Maintained Space


### Sheppard & Warden

**Scarborough** $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony


### 401 & Mccowan

**Mississauga** $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Ttc Bus Within Walking Distance


### Warden & St Clair

**Scarborough** $629,000
Bedrooms: 2+1 Washrooms: 1
792 Sf Of Low-Rise Condo

### Markham & Eglinton

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Appliances


### John W Taylor / Ferris Lane

**New Tecumseth** $839,000
Bedrooms: 4 Washrooms: 3
Open Concept, H/Wood Floors


### Simcoe & Ritson

**Oshawa** $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors


### Altona / Finch

**Pickering** $979,000
Bedrooms: 3 Washrooms: 4
Brand New Double Car Garage


### Harmony & Taunton

**Oshawa** $1,224,888
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Schools, Shop

### Donald Cousens & Hwy 7

**Markham** $1,488,888
Bedrooms: 4 Washrooms: 4
Less7 Yrs Old Beautiful 9Ft Ceilings

### Hwy 48/Castlemore

FOR LEASE
**Markham** $3,600
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Go Train Station

### Hwy 7/Donald Cousens

FOR LEASE
**Markham** $3,500
Bedrooms: 4 Washrooms: 3
Approx. 2500 Sq Ft

### Church / Rossland

FOR LEASE
**Ajax** $3,175
Bedrooms: 4 Washrooms: 3
Family Friendly Neighbourhood

### Edenbrookhill / Sandalwood

FOR LEASE
**Brampton** $1,800
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Markham Rd & 16th Ave

FOR LEASE
**Markham** $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout; 9 Feet Ceiling

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடா வாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!



என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே! திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 11 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 10 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 423 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு 7 பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களது இடர்களைக் களையவும் கல்வியை மேம்படுத்தவும் இம்மாதம் 23 ஒக் 2022 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றவுள்ள நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். (விபரங்கள் 12ம் 13ம் பக்கத்தில் உள்ளது)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிக் பெரிய உதவியாக இருக்கும்.

எமது கனடிய மண்ணிலும் அனைத்துமே விலையேற்றம் கண்டுள்ளமையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் 19 ஒக்டோபருக்கு முன்னதாக தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# இந்தியாவில் பல முக்கிய சந்திப்புக்களை நடத்தி 13வது திருத்தத்தை வலியுறுத்திய ஜனநாயகப் போராளிகள்



ஜனநாயகப் போராளிகள் கட்சியினர், இந்தியாவில், இந்திய அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் ஆளுங் கட்சியின் பிரதிநிதி விவேக் ஆகியோருடன், சந்திப்புக்களை நடத்தியுள்ளனர். இது தொடர்பில், ஜனநாயகப் போராளிகள் கட்சி செயலாளர் இ.கதிர், கருத்து வெளியிட்டுள்ளார். பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் இலங்கையின் தற்போதைய நிலைமை, தமிழ் மக்களின் அரசியற் தீர்வு குறித்த விடயங்கள், எமது மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடினோம்.

விசேடமாக, இந்திய இலங்கை ஒப்பந்தம் ஊடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் முறைமை, பூ ரண அதிகாரங்களுடன் கூடியதாக அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டதாக அமைய வேண்டும். நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு, இலங்கை அரசாங்கத்திற்கு, இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். 13 ஆவது (22ம் பக்கம் பார்க்க)

# சுமந்திரன் எம்.பியை கொலை செய்ய முயற்சித்த 4 சந்தேக நபர்களுக்கு 5 வருடங்களுக்குப் பின்னர் பிணை!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை, படுகொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த, 4 சந்தேக நபர்களையும் பிணையில் செல்ல, கொழும்பு மேல் நீதிமன்றம், இன்று உத்தரவிட்டுள்ளது. வழக்கு விசாரணை, 13 ஒக்டோபர் 2022 கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சந்தேக நபர்கள் சார்பாக, சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல், ரணித்தா ஞானராஜா, சுரங்க பண்டார, சுவாதிகா இரவிச்சந்திரன் ஆகியோர், மன்றில் முன்னிலையாகினர். அதனையடுத்து, சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேலினால், சந்தேக நபர்கள் 4 பேர் சார்பான பிணை விண்ணப்பம், திறந்த மேல் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, அரசதரப்பு சட்டத்தரணியால், அரச தரப்பு வாதம், மன்றில் முன்வைக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரட்ன, சந்தேக நபர்கள் 4 பேருக்கும், நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்கினார். பிரமுகர் ஒருவரை கொலை செய்ய முயற்சித்தமை, சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில், கடந்த 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி, பயங்கரவாத தடுப்பு பிரிவினரால், குறித்த 4 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்பதுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்,
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்,
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


October 24

VOTE FOR

- Accountability
- Transparency
- Accessibility
- Integrity

ELECT

SRINI SUPPIRA

Candidate Markham Regional Councillor



647-293-4422

votesrini@gmail.com

votesrini

SriniSuppira.ca

votesrini

Together We Build Your Future in Markham





ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

15 ஒக்டோபர் 2022 சனி விரத கடைசி நாள்

15 ஒக்டோபர் 2022

5வது சனி விரத உபயம்:- நாகலட்சுமி நாகராஜா குடும்பம்

22 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை

சனிப் பிரதோஷ விரதம்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அங்கத்தவர்களுக்கான வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயமாக ஆலய இருப்பிடம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# உண்மையும் நேர்மையும் கொண்ட மானிதாபிமானி ஸ்ரீகுகன் (ஸ்ரீ அண்ணா) ஸ்ரீஸ்கந்தராஜா மறைந்தார்!



கனடிய மண்ணில் மூத்த தமிழ்க் குடிமகனாக வாழ்ந்தவரும் தமிழ்சமூகத்தின் மீது கொண்ட அதீத பற்றுக் காரணமாக புலம்பெயர் கனடியத் தமிழ் சமூகத் திற்கு தன்னால் முடிந்தளவு பங்களிப்பை உண்மை யாகவும் நேர்மையாகவும் துணிச்சலாகவும் மேற் கொண்ட ஸ்ரீகுகன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் 07 ஒக்டோபர் 2022 கனடாவில் காலமானார்.

அமரர் ஸ்ரீகுகன் அவர்களை 1983ம் ஆண்டில் இரு ந்து நான் அறிவேன். 1982 பிற்பகுதியில் அல்லது 1983 முற்பகுதியில் இலங்கைத் தமிழர்களாகிய நாம் அகதி களாக கனடிய மண்ணிற்கு புலம்பெயர்ந்த போது தன்னுடைய இனத்தவன் என்ற ஒரேயொரு காரத்திற் காக எங்களைத் தேட வந்து அனைத்து வகையிலும் அறிவுரைகளை வழங்கியவர்களில் மிக முக்கியமான வராகத் திகழ்ந்தவர் அண்ணர் ஸ்ரீகுகன் அவர்கள்.

1983களில் இங்கு இருந்த தமிழீழச்சங்கத்தின் தலைவ ராகவும் அவர் இருந்தார். யூலை இனக்கலவரம் ஆரம் பமாவதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னர் திருமலை வவுனியா போன்ற தமிழ் எல்லைக் கிராமங்கள் திட்ட மிட்ட வகையில் அரச படைகளாலும் காடையர்களா லும் தீக்கரையாக்கப்பட்ட போது அந்தச் சம்பவத்தை சர்வ தேசத்திற்கு தெரியப்படுத்துவதற்காக கனடாவில் ஒட்டவாவில் முதன்முதலாக ஓர் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது. அதற்கு தலைமை தாங்கி முன்னணி யில் நின்று செயற்பட்டவர் ஸ்ரீ அண்ணர் அவர்கள். ஒப்பீட்டளவில் குறைந்த தொகையினராக இருந்த போதிலும் கனடியத் தேசியப் பத்திரிகைகளான ரொறன்ரோ ஸ்ரார், குளோபல்மெயில் போன்றவை முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருந்தன. அதற்குக் காரணமாகவும் பொறுப்பாகவும் இருந்தவர் மதிப்புக்குரிய திரு அருளையா அவர்கள் ஆகும்.

யூலை இனக்கலவரத்தற்குப் பின்னர் நடைபெற்ற அரசியல் ரீதியான போராட்டங்கள் அனைத்திலும் ஸ்ரீகுகன் அவர்களது பங்களிப்பு நிறைந்திருந்தது. இக்கால கட்டத்தில் அகதி விண்ணப்பம் கோருபவர் களுக்கு தன்னால் முடிந்தளவு சட்ட உதவிகளையும் வழித்துணை உதவிகளையும் தரம் தராதரம் பார்க் காது செய்த ஒரு பெருமகன் அவர்.

கனடிய குடிவரவுத் திணைக்களத்தில் அகதிகள் விசாரணைக் குழுவின் தலைவராக அவர் பதவி வகித்த போது பொழுது எந்தவொரு அகதி அந்தஸ் துக் கோரிய தமிழனையும் நிராகரித்தது கிடையாது. இலங்கைத் தமிழன் நாட்டில் இருக்க முடியாது இங்கு வருகிறான். மன உலைச்சல். மன விரக்தி காரணமாக அவனால் சரியாக விசாரணையை எதிர் கொள்ள முடி யாமல் இருக்கலாம். ஆனால் அவன் பாதிக்கப்பட்ட வன் என்ற அடிப்படையில் நீதியை வழங்கியவர் அண்ணர் ஸ்ரீ அவர்கள்.

கொழும்புச் சூழலில் பிறந்து வளர்ந்து உயர் கௌரவத் துடன் வாழ்ந்த போதிலும் தமிழ் இனப்பற்றும் தமிழ்த்தேசியப் பற்றும் கொண்டவராக விளங்கிய ஸ்ரீ அண்ணர் அவர்கள் தமிழ் சைவ உணவை மிகவும் ருசித்துச் சாப்பிடுவார். குறிப்பாக 1983, 1984களில் தமிழ் உணவகங்களோ கடைகளோ இல்லாத காலங் களில் எங்கள் **Room**க்கு அல்லது ஆனந்தன், சிவா, ஈசன் போன்றவர்களின் (சண்லைவ்) **Room**க்கு வரப் போகிறார் என்றால் தொலைபேசியில் சொல்லுவார் இன்றைக்கு எனக்கு யாழ்ப்பாணத்துப் பருப்புக்கறியும் தக்காளிப்பழ சொதியும் தர வேண்டும் என ஓர் குழந்தையைப் போன்று கேட்பார். எந்த நிலையிலும் பெருமையில்லாது வாழ்ந்த மானிடன் அவர்.

அன்னார் இலங்கையில் புகழ்பூத்த பிரதம நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது மகனாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக் கிழமை **Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada** இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் தகனம் செய்யப் படும்.

தனது வாழ்வின் பெரும் பகுதியை இனத்திற்காக உண்மையாகவும் நேர்மையாகவும் பணியாற்றிய ஸ்ரீ அண்ணர் நன்றியுணர்வுள்ள தமிழர் கனடாவில் வாழும் வரை வாழ்வார். மரணம் பலரைப் புதைக் கின்றது. சிலரை விதைக்கின்றது. ஸ்ரீ அண்ணர் விதைக்கப்படுகிறார். இந்த மண்ணில் அவரது பெயர் நிலைத்து வளரும். அன்னாரது மறைவுக்கு எனது குடும்பத்தின் சார்பிலும் ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

**T.K.பரமேஸ்வரன் – ஆசிரியர் ஈழநாடு**

## மீண்டும் எரிக் சொல்ஹெய்ம்?

நோர்வேயின் முன்னாள் அபிவிருத்தி அமைச்சரும் விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற சமாதான பேச்சுக்களின் போது பிரதான சமாதான அனுசரணையாளராகவும் பேச்சு நடுநிலையாளராகவும் செயலபட்ட எரிக் சொல் ஹெய்ம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கால நிலை விவகாரங்களுக்கான ஆலோசகராக நியமிக்கப் பட்டிருக்கின்றார்.

ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புக்களால் எவருமே எதிர்பாராத வகையில் இலங்கையின் எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக வரமுடிந்தது. இது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இப்போதுஇ எரிக் சொல்ஹெய்மின் நியமனமும் கூட அவ்வாறானதோர் ஆச்சிரியம் தான்.ஏனெனில் பேச்சுக் கள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து நோர்வே விரல்களை சுட்டுக் கொண்ட அனுபவத்துடன் வெளியேறி விட்டது.

நோர்வே தமிழர் பிரச்னையில் முறையாக பொறுப்புக் கூறவில்லை என்றவாறான விமர்சனங்கள் தமிழ்த் தேசிய தரப்புக்கள் சிலரிடம் உண்டு.

குறிப்பாக எரிக் சொல்ஹெய்ம் தொடர்பில் புலம்பெயர் சூழலிலுள்ள சிலர் இப்போதும் அவ்வப்போது குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

நாங்கள் அனுசரணையாளர்கள் மட்டுமே. ஓர் அனு சரணையாளராக என்ன செய்ய முடியுமோ அதனை நாங்கள் சிறப்பாக செய்திருந்தோம்.

இரண்டு தரப்புக்களும் யுத்தத்தை நோக்கிச் சென்ற போது எங்களால் என்ன செய்ய முடியும்? குற்றச் சாட்டுக்களுக்கு சொல்ஹெய்மின் பதில் இதுதான்.

சீனாவின் பசுமைத் திட்டத்துக்கான ஒரு பாதை ஒரு வலயம் நிலையத்தின் தலைவராக இருக்கின்ற எரிக் சொல்ஹெய்ம் தற்போது ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இதன் மூலம் சொல்ஹெய்ம் மீளவும் இலங்கையின் விடயங்களில் பங்கு கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிரு க்கின்றார்.

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற சூழலில் தான் எரிக் இவ்வாறானதொரு பொறுப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

முன்னர் நாடு யுத்தத்துக்குள் சிக்கியிருந்த போது சமாதான ஏற்பாட்டாளராக இலங்கைத் தீவின் விடயங்களில் பங்கு கொண்டிருந்தவர் தற்போதுஇ பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் விடயத்து க்குப் பங்களிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் சாதக மான பார்வையைக் கொண்டிருக்கும் சொல்ஹெய்ம் ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டைக் கட்டியெழுப்பி முடியுமென்னும் நம்பிக்கை கொண்டவர்.

ரணில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசி வருகின்றார். ரணில் பாராளுமன்றத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றார். அவர் விரும்பியது போன்று மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை.

22ஆவது திருத்தச்சட்டம் இதற்கு சிறந்த உதாரணமாகும். எனினும் தனது அதிகார எல்லைக் குள் செய்யக்கூடிய விடயங்களை செய்ய முயற்சிக் கின்றார்.

தனது தனிப்பட்ட சர்வதேச தொடர்புகளைப் பயன் படுத்தி பொருளாதார நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்தலாமென்று எண்ணுகின்றார் போலும். எனி னும் பாராளுமன்ற பலம் அடிப்படையானது.

பாராளுமன்ற பலம் இல்லாது நாட்டில் அடிப்படை யான மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

இந்த சவாலை ரணில் எப்படி சமாளிக்கப் போகின் றார்? அதில் தான் அவரின் வெற்றி தங்கியிருக் கின்றது.

# தமிழர்களைக் கடத்தி முதலைக்கு இரையாக்கிய தகவலைச் சொன்னவர் வெள்ளை வானில் கடத்தல்!

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக பதவி வகித்த காலப்பகுதியில் வெள்ளை வானில் தமிழர்கள் கடத்தப்பட்டு, முதலைக்கு இரையாகப் போடப்பட்ட தாக பரபரப்பு தகவல் வெளியிட்டவர்களில் ஒருவர், வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்டுள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, 2019 நவம்பரில், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் செய்தியாளர் சந்திப் பொன்று நடந்திருந்தது. அதில், வெள்ளை வானில் கடத்தல் மேற்கொள்ளும் அணியைச் சேர்ந்தவர்கள் என கூறப்பட்ட 2 பேரும் அழைத்து வரப்பட்டிருந்த னர். தமிழர்களை கடத்திச் சென்று முதலைக்கு இரை யாக்கியதாக அதிர்ச்சி தகவலை அவர்கள் வெளி யிட்டி ருந்தனர். பின்னர், அவர்கள் மீது பொலிஸார் வழக்கு தொடர்ந்து கைது செய்யப்பட்டு, விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர். தற்போது பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளனர். பின்னர் வழக்கின் இரண்டாவது சாட்சியாக மாறிய களனி பெத்தியகொட பிரதேசத் தைச் சேர்ந்த அத்துல சஞ்சீவ மதநாயக்க, வெள்ளை வாகனத்தில் வந்த ஆயுதக் குழுவினால் கடத்திச் செல லப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.(22ம் பக்கம் பார்க்க)

# மனிதஉரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் பிரேரணை மக்களது பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வைக் கொடுக்காது!-சுமந்திரன்



ஜெனிவா மனித உரிமை பேரவையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் எந்த நாட்டையும் கட்டுப்படுத்தாது. கட்டுப் படுத்தாத தீர்மானங்களைத் தான் இந்த பேரவைக்கு நிறைவேற்ற முடியும். அதனால் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம் மூலம் எமது மக்களது பிரச் சினைகளுக்கு உடனடியாக தீர்வைக் கொடுக்காது.

என்றாலும் இந்த பிரேரணை இலங்கை க்கு மிகவும் சவால் மிக்கதானதாகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந் திரன் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை க்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கும் பிரேரணை தொடர்பாக கருத்து தெரி விக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கும் பிரே ரணை மூலம் செய்யக்கூடியது என்ன என்பது தொடர்பாக தமிழ் மக்களுக்கு தெரியும்.

ஏனெனில் மனித உரிமை பேரவையில் 10வருடங்களாக இந்த பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அதனால் இந்த பிரே ரணை ஊடாக செய்ய முடியாததை தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதில்லை.

என்றாலும் தற்போது நிறைவேற்றப்பட்டி ருக்கும் பிரேரணை மூலம் இலங் கையை சர்வதேச கண்காணிப்புக்குள் வைத்திருக்கும் பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

அது தொடர்ச்சியாக இடம் பெறுகின் றது. அதேநேரம் மனித உரிமை பேரவைக்கு இருக்கும் அதிகாரங்களை வைத்துப் பார்ப்போமானால் நிறைவேற் றப்பட்டிருக்கும் தீர்மானம் முன்னேற்ற கரமான தீர்மானம் என கருதலாம். ஆனால் அது எமது மக்களது பிரச் சினைகளுக்கு உடனடியாக தீர்வைக் கொடுக்காது. அத்துடன் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலம் தாங்கள் எதிர்பார்த்த தீர்வுகள் இதன் மூலம் கிடைக்கவில்லை எனவும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டிரு ப்பதாகவும் ஒரு சிலர் தெரிவித்திருப்ப தாக அறியக் கிடைத்தது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையினுடைய அதிகார வரம்பு என்ன என்பதை தெரியாதவர்கள்தான் இவ்வாறு கதைக்கின்றனர். இந்த பேரவையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் எந்த நாட்டையும் கட்டுப்படுத்தாது. கட்டுப்படுத்தாத தீர்மானங்களைத்தான் இந்த பேரவைக்கு நிறைவேற்ற முடியும். அதனால் பெரியளவில் இந்த பிரேரணை மூலம் எதிர்பார்க்க முடியாது. அத்து டன் இந்த பேரவையின் மூலம் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என மக்கள் எதிர்பார்த்திருந்தால், அது மக்களின் தவறு அல்ல. அரசியல் வாதிகள் தான் இவ்வாறான தவறான எதிர்பார்ப்பை கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் இந்த பிரேரணையால் எதனை செய்ய முடியும் என்பது கடந்த 10 வருடங்களாக இதனை பார்த்துவரும் மக்களுக்கு தெரிந்திருக்கும். அந்த நோக்கில் பார்க்கின்றபோது இந்த தீர்மானம் மிகவும் முன்னேற்றகரமான தீர்மானமாகவே காண்கின்றேன்.

அத்துடன் இந்த பிரேரணை இலங்கை க்கு மிகவும் சவால் மிக்கதானதாகும். ஏனெனில் மனித உரிமை பேரவையின் பிரேரணை எந்த ஒரு நாட்டையும் கட்டுப்படுத்த முடியாது என்றாலும். நாட்டை கட்டியெழுப்புவதாக இருந் தால், இந்த பிரேரணைக்கு ஆதரவளித்த மற்றும் நடுநிலையாக இருந்த நாடு களின் உதவி இலங்கைக்கு மிக முக்கிய மானதாகும். அதனால் இலங்கை அரசாங் கம் இந்த பிரேரணையில் உள்ளடக்கப் பட்டிருக்கும் தீர்மானங்களுக்கு ஒத்து ழைக்காமல் இருக்கின்றவரைக்கும் பொருளாதார சிக்கலில் இருந்து மீள எழுவது கூட கஷ்டமானதாகவே இருக் கும் என்றார்.

இதேவேளை இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் புதிய தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளை யும், சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய அனைத்து வாக்குறுதி களையும் நிறைவேற்றுவதற்கு ஐ.நாவும், பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடு களும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைவிடுத்து இலங்கை அரசுக்குத் தொடர்ந்து கால அவகாசம் வழங்கி வந்தால் அதில் எந்தப் பயனும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் புதிய தீர்மா னத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினராகிய நாம் வரவேற்கின்றோம். நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனிதஉரிமைகள் சம்பந்தமாக இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டிய கடமை களை இந்தத் தீர்மானம் வலியுறுத்தி யுள்ளது.

அதே சமயம் சாட்சியங்கள் சேகரிக்கும் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும், விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இந்தத் தீர்மானம் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள் ளது. இதை நாங்கள் வரவேற்கின்றோம். புதிய தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளை யும், சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய அனைத்து வாக்குறுதி களையும் நிறைவேற்றுவதற்கு ஐ.நாவும், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா உள்ளி ட்ட நாடுகளும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பயணத் தடை விதிக்கவுள்ள கனடா?

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தை தொடர்ந்து, இலங்கை இராணுவ அதிகாரிகள் பலருக்கு அங்கத் துவ நாடுகள் பயணத்தடை விதிக்கு மெனத் தகவல் வெளியாகியுள்ளது. இதில் உடனடி நடவடிக்கையெடுக்கும் கனடா, குறைந்தது இராணுவ உயர் அதிகாரிகள் மூவரை தடை செய்ய வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத் துவ நாடுகளும் இதைப் பின்பற் றும் என நம்பப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கடந்த வியாழக்கிழமை இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனிதஉரிமைகளை மேம்படுத்துதல்' என்ற புதிய தீர்மானத்தை நிறைவேற்ற யது. இதற்கு அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட 20நாடுகள் ஆதரவு தெரிவித் துள்ளன.



மேலும், 20 நாடுகள் வாக்களிக்கவில்லை. ஏழு நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வும் வாக்களித்தன. இந்தத் தீர்மானத்தில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் விளைவாக மனித உரிமை மீறல்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் கீழ் செயல் படும் புதிய செயலகம், மனித உரிமை

மீறல்களுக்கு வழி வகுத்ததாகக் கூறப் படும் பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் புதிய தீர்மானத்தில் உள்ள அனைத்துப் பிரச்னைகளையும் விசாரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள கறுப்புப் பட்டியல் நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கப் பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் 193 அங்கத்துவ நாடுகளில் 42 நாடுகள் கறுப்புப் பட்டியலில் உள்ளன. மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா.வுடன் ஒத்துழையாமையை அண்மைய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

# பிச்சைக்காரன் என்ற அந்தஸ்தைக் கேட்கிறதா இலங்கை! குறைந்த வருமானம் பெறும் நாடாக தரமிறக்கும் பின்னணி?

இலங்கையை மத்திய வருமானம் பெறும் நாடுகளிலிருந்து, குறைந்த வருமானம் பெறும் நாடாக தரமிறக்குவ தற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்ச ரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கின்றார்.

சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைய, இலங்கை மத்திய வருமானம் பெறும் நாடாக காணப்பட்டது. இந்த நிலை யில், மத்திய வருமானத்தை பெற்றுக் கொள்ளும் நாடாக இலங்கை இருக்கு மானால், நிவாரண அடிப்படையிலான உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாது என அமைச்சர் கூறுகின்றார். தனிநபர் வருமானத்தின் அடிப்படையிலேயே இந்த தரப்படுத்தல் முன்னெடுக்கப்படு வதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

கடந்த காலங்களில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக, தனிநபர் வருமானமும் வீழ்ச்சி கண்டுள்ளது. வரலாற்றை நோக்குவோமானால், 1948ம் ஆண்டு முதல் 2004ம் ஆண்டு வரை யான 56 வருடங்களாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் 5திற்கும் குறைவாக மட்டத்தில் இருந்தது. நாடு சுதந்திரம் பெறும் போது, தனிநபர் வருமானமானது, 120 டாலராக காணப் பட்டது. 56 வருடங்கள் கடந்ததன் பின்னர், தனிநபர் வருமானமானது, 1000 டாலர்களாக காணப்பட்டது.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட தன் பின்னர், பொருளாதாரம் வளர்ச்சி அடைய ஆரம்பித்தது. பாரிய உற்பத்தி நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டன. அந்த பிரதிபலனாக 2014ம் ஆண்டு தனிநபர் வருமானமானது, 3827 டாலர் வரை அதிகரித்தது. இதையடுத்து, இலங்கை குறைந்த வருமானத்தை பெறும் நாடு என்ற பட்டியலிலிருந்து, மத்திய தர வருமானம் பெறும் நாடாக மாற்றம் பெற்றது.

2017ம் ஆண்டு தனிநபர் வருமானம் 4074 டாலராகவும், 2018ம் ஆண்டு 4057 டாலராகவும் காணப்பட்டது. 2019ம் ஆண்டு 3848 டாலராக அந்த தொகை குறைவடைந்தது. 2020ம் ஆண்டு 3695 டாலராகவும், 2021ம் ஆண்டு 3815 டாலராகவும் குறைவடைந்தது. அந்த நிலையில், 2022ம் ஆண்டு தனிநபர் வருமானம் மேலும் குறைவடைந்த நிலையில், அது குறித்து உலக அமைப்புக்கள் நிதி அமைச்சருக்கு அறிவித்தல் விடுத்திருந்தன' அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

குறைந்த வருமானம் பெறும் நாடு :- தனிநபர் வருமானம் 1085 டாலருக்கு குறைவு

கீழ் மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடு:- தனிநபர் வருமானம் 1085 - 4255 டாலர்


மேல் மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடு:- தனிநபர் வருமானம் 4256 - 13205 டாலர்

உயர் வருமானம் பெறும் நாடு :- தனிநபர் வருமானம் 13205 டாலருக்கு அதிகம் சுதந்திரத்திற்கு பின்னராக காலத்தில் குறைந்த மத்திய வருமானம் பெறும் நாடாக காணப்பட்ட இலங்கை, மத்திய வருமானம் பெறும் நாடாக 1997ம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டது.

அதன் பின்னர் 2019ம் ஆண்டு உயர் மத்திய வருமானம் பெறும் நாடாக தரமுயர்ந்திருந்ததுடன், 2020ம் ஆண்டு மீண்டும் குறைந்த மத்திய வருமானம் பெறும் நாடாக தரமிறக்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியிலேயே, நிவா ரண அடிப்படையிலான உதவிகளை பெற்றுக்கொள்ளும் வகையில், சர்வதேச நிறுவனங்களின் தலையீடுகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் இலங்கையை முன்னர் இருந்த நிலைமைக்கு, குறைந்த வரு மானம் பெறும் நாடாக தரமிறக்கு வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கையின் கடன் தரமதிப்பீடு குறைக்கப்பட்டதன் காரணமாக புனரமைப்பு மற்றும் அபி விருத்திக்கான சர்வதேச வங்கியிடமிரு ந்து (IBRD) வர்த்தகக் கடன் பெறு வதற்கு இலங்கைக்கு தொட ர்ந்தும் சந்தர்ப்பம் கிடையாது என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA) வழங்கும் சலுகைக் கடன் வசதி யைப் பெறுவதற்காக, நடுத்தர வருமா னம் பெறும் நாடு என்ற நிலையை தற்காலிகமாக பொருட்படுத்தாது செயற் பட உலக வங்கிக்கு வாய்ப்பு வழங்கப் பட வேண்டுமெனக் கோரி முன்வைக்கப் பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள் ளது. இக்கட்டான நிலையிலுள்ள நாடு களுக்கு சலுகை அடிப்படையிலான உதவி வழங்கும் உலக வங்கியின் கீழ் இயங்கும் அமைப்பாக சர்வதேச



அபிவிருத்திச் சங்கம் செயல்படுகிறது.

இதன்படி, இடைநிலை சலுகைக் கடன் திட்டத்தை (Reverse graduation) மிகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே பின்பற்ற அரசாங்கம் முடிவு செய்து ள்ளது. இந்த முறை `பயி' என்று அழைக்கப்படுகிறது. மேலும் இந்தோ னேசியா உட்பட 12 நாடுகள் ஏற்கனவே இந்த முறையைப் பயன்படுத்தி கடன் பெற்றுள்ளன.

இலங்கை தன்னை தரமிறக்கிக் கொண் டதன் ஊடாக, பிச்சை எடுப்பதற்காக தனக்கு `பிச்சைக்காரன்' என்ற அந்த ஸ்தைை கொடு என இலங்கை கோரு கின்றது எனகின்றார் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை பேராசிரியர் எம்.கணேஷமூர்த்தி.

''இலங்கையை பொருத்த வரை, 2022ம் ஆண்டுக்குரிய தலா வருமானமாக உலக வங்கி சொல்வது, 3820 டாலர். இந்த 3820 டாலர் என்பது கீழ் மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற வகுப்புக்குள் தான் இலங்கை இடம் பிடிக்கும். 2021ம் ஆண்டு ஜுலை முதல் 2022ம் ஆண்டு ஜுலை வரையிலான காலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டே இந்த தரவுகள் வெளியிடப் பட்டுள்ளன. ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர் இந்த மூன்று மாத காலப் பகுதியில் பெரியதொரு வீழ்ச்சி ஏற்பட்ட தாக எங்களால் சொல்ல முடியாது. 3820 டாலரிலிருந்து 1085 டாலராக குறை ந்து விட்டது, எங்களை குறைந்த வருமானம் பெறும் நாடாக அறிவியுங் கள் என கேட்க முடியாது.

நான் `பிச்சைக்காரன்' ஆகி விட்டேன், பிச்சை எடுப்பதற்காக எனக்கு பிச்சைக்க காரன் என்ற அந்தஸ்த்தை கொடு என்று அரசாங்கம் கேட்கின்றது. இப்படி அறிவிப்பதற்கு முக்கியமான ஒரு கார ணம் இருக்கின்றது. சர்வதேச நாணய நிதியம், குறிப்பாக உலக வங்கியிடம் கடன் வாங்க போகும் போது, இரண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. உலக வங்கி என்பது ஐந்து நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு அமைப்பு. சர்வதேச அபிவிருத்தி முகவர் என்ற நிறுவன மும், அபிவிருத்தி மற்றும் மீள்கட்ட மைப்பிற்கான சர்வதேச வங்கி என்று நிறுவனமும் இந்த இடத்தில் முக்கிய இடத்தை பெறுகின்றன. இந்த இரண்டு நிறுவனங்களின் ஊடாகவே கடன்கள் நாடுகளுக்கு வழங்கப்படும்.

சர்வதேச அபிவிருத்தி முகவர் என்பது குறைந்த வருமானம் பெறும் நாடுகளு க்கு சலுகை அடிப்படையில் கடன் களை வழங்கும் நிறுவனம். மற்றையது, உலக வங்கியின் அங்கத்துவ நாடுகளு க்கு கடன் வழங்க வேண்டும் என்றால், அது அபிவிருத்தி மற்றும் மீள்கட்ட மைப்பிற்கான சர்வதேச வங்கியின் ஊடாகவே முன்னெடுக்கப்படும். அபி விருத்தி மற்றும் மீள்கட்டமைப்பிற்கான சர்வதேச வங்கியினால் வழங்கப்படும் கடன்கள் வட்டி வீதம் குறைந்தாலும், சலுகைகள் கிடைக்காது. இந்த அறி விப்பின் ஊடாக சலுகைகள் கடன்கள் இல்லாது போயுள்ளது. இதனால், நாங்கள் வறிய நாடாக மாறியுள்ளோம், எங்களுக்கு கடனை தாருங்கள் என இலங்கை அரசாங்கம் கேட்கின்றது. கடன்களை பெற்றுக் கொள்வதற்கான முயற்சியாக இது காணப்படுகின்றது. எனினும் நாட்டின் கௌரவத்திற்கு இது வொரு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்' என பேராசிரியர் எம்.கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.

# இலங்கை விவகாரத்தில் சர்வதேசத்தின் கண்காணிப்பு அவசியம்

## ஜெனிவா பிரேரனை புலப்படுத்துகிறது என சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு



இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானம், இலங்கை விவகாரத்தில் சர்வதேசத்தின் தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம் என்பதையே புலப்படுத்துவதாக தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள், தற்போது மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளை உறுதி செய்வதற்கும் போர்க்குற்றங்கள் உள்ளடங்கலாக கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கும் இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பில் பிரிட்டன் தலைமையில் கனடா, ஜேர்மனி, மாலாவி, மொன்டெனிக்ரோ, வட மெசிடோனியா மற்றும் அமெரிக்கா ஆகிய இணையனுசரணை நாடுகளால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட புதிய பிரேரணை கடந்த வியாழக்கிழமை (ஒக் 6) 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள இப்புதிய தீர்மானம் குறித்து சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் பல்வேறு அபிப்பிராயங்களை வெளிப்படுத்தியுள்ளன.

### சர்வதேச மன்னிப்புச்சபை

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் புதிய தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டமையானது இலங்கை விவகாரத்தில் சர்வதேசத்தின் தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம் என்பதை பிரதிபலிக்கின்றது. இதனை சரியான பாதையில் எடுத்துவைக்கப்பட்ட முதல் அடியாக கருத முடியும் என்றாலும், இன்னமும் நிறைவேற்றப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. தற்போது நாடு முகங் கொடுத்திருக்கும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் விளைவுகள் உள்ளடங்கலாக மிக மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விரிவாக ஆராயக்கூடிய வகையிலான விசேட நிபுணத்துவப் பொறிமுறையொன்றை நிறுவுமாறு சிவில் சமூக அமைப்புக்கள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவதில் மனித உரிமைகள் பேரவை தோல்வியடைந்திருக்கின்றது.

அதேவேளை சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் விசாரணைகளை முன்னெடுத்தல் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடு குறித்து ஆராய்தல் உள்ளடங்கலாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகளுக்கு அமைவாக, சர்வதேச பொறுப்புக்கூறல் செயன்முறையை விஸ்தரிப்பதற்கு ஐ.நா உறுப்புநாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய பிரதிப் பணிப்பாளர் டினுஷிகா திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

### மனிதஉரிமைகள் கண்காணிப்பகம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. தற்போது ஆயிரக்கணக்கான அமைதிவழிப் போராட்டக்காரர்களால் வலியுறுத்தப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளை உறுதி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். அது மாத்திரமன்றி போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை முடிவுக்கு கொண்டு வருவதுடன் போர்க் குற்றங்கள் உள்ளடங்கலாக கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்ய வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

### ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் குழு

சுயநிர்ணயம் என்பது மனித உரிமையாகும். எனவே, ஐக்கிய நாடுகள் சபையானது ஈழத்தமிழர்கள் தொடர்பில் ஒரு சுதந்திர சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த வேண்டும். அதேவேளை இலங்கை தொடர்பான புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இந்தியா கலந்துகொள்ளாமையானது தலைமை தாங்குவதற்கோ அல்லது சர்வதேச சமூகத்தை பின்பற்றுவதற்கோ இந்தியாவுக்கு இயலுமை இல்லை என்பதையே காண்பிக்கின்றது. சரி - பிழை அல்லது நீதி - அநீதி அல்லது சிறந்தது - மோசமானது ஆகியவற்றுக்கு இடையில் இந்தியா ஒரு போதும் நடுநிலை வகிக்கக்கூடாது என்று அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கைக் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

### சமத்துவம் விடுதலைக்கான மக்கள் அமைப்பு

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானமானது தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தினால் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதை முன்னிறுத்தி சரியான கோணத்தில் மேற் கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கையாகும் என்று வொஷிங்டனை தளமாகக் கொண்டியங்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# யாழ்ப்பாணத்தில் போதைக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்வுக்கு எங்கே செல்வது?

## இது நம்ம யாழ்ப்பாணம் -3

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழநாட்டிற்காக
– பகிரதன் –

போதைப்பொருட்களின் பாவனை வட பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அச்சம்தரும் வகையில் அதிகரித்து வரும் நிலையில், இதனால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கும், அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்குமான முயற்சிகளிலும் அதிகளவு கவனம் செலுத்தப்படுகின்றது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மட்டுமன்றி, அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் சிலவும் இவ்விடயத்தில் அக்கறையுடன் செயற்படுகின்றன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை வசதிகள் வழங்கப்படுகின்றனவே தவிர புனர் வாழ்வுக்கான வசதிகள் அங்கு இல்லை. புனர்வாழ்வு தேவையானவர்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ள கந்தக்காட்டு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையத்துக்குத்தான் அனுப்பப்படுகின்றார்கள். இங்கு பெருமளவுக்கு சிங்களவர்களே சிகிச்சைக்காக வருவதால் தமிழ் இளைஞர்களுக்கு சங்கடமான நிலையை ஏற்படுத்துகின்றது. யாழ்ப்பாணத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால், புனர்வாழ்வு முகாம் ஒன்று நடத்தப்படுகின்ற போதிலும், அது வரையறுக்கப்பட்ட வசதிகளுடனேயே செயற்படுகின்றது.

யாழ். மாவட்ட செயலகத்தினாலும் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கப்படும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை மீட்கும் செயற்றிட்டத்தின் கீழ் 12பேர் கந்தக்காடு புனவர்ழ்வு முகாமிற்கு அனுப்பட்டுள்ளனர் என்று இது தொடர்பாக தகவல் தெரிவித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மனநல ஆலோசனை சிகிச்சைக்காக, யாழ். சிறைச்சாலையில் 304 பேரும், சமூகத்திலிருந்து கடந்த ஆண்டு 354பேரும், இந்த ஆண்டில் இதுவரை 167பேரும்




உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களை மீட்பதற்காக, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கான 'தடுப்பு மையமொன்றை' அமைப்பதற்கு முயற்சிக்கின்றோம். கோப்பாயில், உள்ள கட்டடம் தற்காலிமாகவே வழங்க முடியும் என்பதால் மருதங்கேணியில் நிரந்தரக் கட்டடத்துக்கான காணிகளை வழங்கத் தயராக உள்ளோம் என்றும் மகேசன் கூறினார்.

இதற்கான திட்டம் வெற்றிபெற்றால் எம்மவர்கள் புனா◌ாவாழ்வுக்காக கந்தக் காட்டுக்குச் செல்ல வேண்டிய தேவை எதிர்காலத்தில் ஏற்படாது என நம்பலாம். ஆனால், இதனைச் செயற்படுத்த எவ்வளவு காலம் செல்லும் என்பதையிட்டு திட்டவட்டமாகக் கூறக்கூடிய நிலை இல்லை.

### அவசர தேவைகளுக்கான தொலைபேசி இலக்கம்

இதனை விட அவசர தேவைகளுக்காக தொலைபேசி இலக்கம் ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். 1927 என்னும் தொலைபேசி சேவை இதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக மாவட்ட செயகத்தில் உள்ள தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை மற்றும் சிறுவர்பதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்கள் ஆகியோரின் கூட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பது, அவர்களுக்கு புனாவாழ்வளித்து மீண்டும் சமூகத்தில் இணைப்பது போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு அப்பால், போதைப்பொருள்களுக்கு அடிமையாவதை முற்கூட்டியே தடுக்க வேண்டிய தேவை இருப்பதைத் தான் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

தினசரி போதைப் பொருட்களால் பாதிக்கப்படுபவர்கள் குறித்த தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதேபோல, போதைப் பொருட்களுடன் இளைஞர்கள் கைதாகும் சம்பவங்களும் அதிகமாக இடம் பெறுகின்றன. இந்த வர்த்தகம், போதைப் பொருட்களைக் கடத்துவது போன்றவற்றில் பெண்களும் ஈடுபடுவதைக் காணமுடிகின்றது.

போதைப்பொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் புதிய பிரச்சினை ஒன்றும் அண்மைக் காலத்தில் அவதானிக்கப்படுகின்றது. யாழ்.போதனா வைத்தியசாலை உள்ளிட்ட வடக்கு வைத்தியசாலைகளில் காணப்படும் மருத்துவ தட்டுப்பாடுகளால் போதைப் பொருட்களை அதிகளவில் நுகர்ந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவர்களுக்கான தீவிரமான சிகிச்சைகளை வழங்குவதில் நெருக்கடிகள் காணப்படுகின்றன. தற்போதைய நிலையில் சிகிச்சையளிப்பதில் காணப்படும் பிரதான தடையாக இது உள்ளது.

### தொண்டு நிறுவனம் செய்யும் பணிகள்

போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்கும் பணியை அரசாங்கம் மட்டும் செய்ய முடியாது. அரசாங்கம் செய்யக்கூடிய பணிகள் முழுமையானவையாக இருப்பதில்லை. இதனால், அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சிலவும் இந்தப் பணியில் இறங்கியுள்ளன.

போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களை மீட்டெடுத்து புனர்வாழ்வளித்து அவர்களை சமூகமயப்படுத்தும் பணியை கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக மாற்றம் அறக்கட்டளை நிறுவனம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்து வருகின்றது. இதன் நிறுவுனரும் அருட்தந்தையுமான கலாநிதி டேவிட்



வின்சன்ட் பற்றிக் அடிகளார் தனது அனுபவங்களை அண்மையில் ஊடகங்களிடம் பகிர்ந்து கொண்டார்.

சமூகத்தில் போதைப்பொருள் பாவனை ஏற்படுத்தி வரும் தாக்கங்களை எதிர் கொள்வாற்காகவே மாற்றம் என்ற அமைப்பை தான் ஏற்படுத்தியதாகச் சொல்கிறார் கலாநிதி டேவிட் வின்சன்ட் பற்றிக் அடிகளார். இளைஞர்கள் சிலர் தாமாகவே முன்வந்து மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக வருவதாக அவர் சொல்கின்றார். போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான சிலா◌ அதிலிருந்து வெளியே வருவதற்கு விரும்பினாலும், அவர்கள் ஒரு நச்சு சுழற்சிக்குள் சிக்குண்டு அதற்குள்ளிலிருந்து வெளிவரமுடியாத நிலையில் இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது எனவும் அவர் சொல்கின்றார்.

யாழ். நகரில் இருந்து செயற்படும் இந்த மாற்றம் நிறுவனம் கடந்த காலங்களில் சுமார் இரண்டாயிரம் இளைஞர்களுக்கு புனர்வாழ்வளித்திருக்கின்றது. பிரதேசம், மொழி கடந்து இந்தச் சேவையை தாம் செய்து வருவதாகச் சொல்கின்றார் கலாநிதி டேவிட் வின்சன்ட் பற்றிக் அடிகளார். ஆனால், பல சவால்களையும், தடைக்கற்களையும் தாண்டியே தாம் செயற்பட வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

### உயிருக்கும் அச்சுறுத்தல் தொடர்ந்தும் பணியில்

போதைப் பொருள் வியாபாரிகளின் வலைப்பின்னல் பலமானதாக இருப்பதாலும், அரசியல்வாதிகள், செல்வந்தர்கள் பலர் இதற்குப் பின்னணியில் இருந்து செயற்படுவதாலும், இந்த புனர்வாழ்வு வழங்கும் பணியில் கலாநிதி டேவிட் வின்சன்ட் பற்றிக் அடிகளார் பல நெருக்கடிகளை சவால்களை எதிர் கொள்கின்றார். பல சந்தர்ப்பங்களில் அவர் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார். தாக்குதல் முயற்சிகள் இடம் பெற்றிருக்கின்றது. உயிராபத்தை எதிர் கொள்ள வேண்டிய நிலைமையும் அவருக்கு ஏற்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும், இந்த முயற்சியிலிருந்து அவா◌ பின் வாங்கவில்லை. ஒதுங்கிச்செல்லவில்லை. இவை அனைத்தையும் எதிர் கொண்டு தான் சமூகத்துக்கான இந்த பணியை அவரது அமைப்பு முன்னெடுத்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் – யாழ். நகருக்கு அண்மித்ததாக இந்த மாற்றம் நிறுவனம் இப்போது செயற்பட்டு வந்தாலும், மருதங்கேணிப் பகுதியில் இதற்காக பத்து ஏக்கா◌ காணி பெறப்பட்டுள்ளது. இதில் தமது நிறுனத்தை விஸ்தரிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். அரசாங்கத் தரப்பிலிருந்து புனர்வாழ்வு முகாம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது.

போதைப்பொருட்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவது, விநியோகிக்கப்படுவது என்பவற்றைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதேவேளையில், புனர்வாழ்புப் பணியும் முக்கியமானது. அதன் மூலமாகவே பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் சமூகத்துக்குள் இணைத்துக் கொள்ள முடியும். சமூகத்தில் அவர்களை வினைத்திறன் உள்ள பங்காளிகளாக்க முடியும். இதற்கு உளவளத் துணை அவசியம். அதற்குத் தேவையானவர்களையும் நாம் தயார்படுத்த வேண்டும்.

அதேவேளையில் எமது சமூகத்தவர்களும் புனர்வாழ்வின் பின்னர் வரும் எமது இளைஞர்களை எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் இணைத்துக் கொள்ள வேண்டும். அதன்மூலமாகவே பலமான பண்பாடு கலாசாரத்தைக் கொண்டுள்ள ஒரு சமூகத்தை எதிர் காலத்தில் எம்மால் கட்டியெழுப்ப முடியும்.

அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து மற்றொரு புதிய விடயத்துடன் சந்திப்போம்.

**Restaurant**

**வேலைக்கு ஆள் தேவை**

மார்க்கத்தில் அமைந்துள்ள இலங்கை இந்திய உணவகத்திற்கு இலங்கை இந்திய உணவுகளை தயாரிக்கக் கூடிய அனுபவமுள்ள **Cook** உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 647 545 2430

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

08 ஒக்டோபர் 2022 முதல் 14 ஒக்டோபர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி சிசிலியம்மா பரமநாதன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வராணி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சிசிலியம்மா பரமநாதன் அவர்களது 31ம்நாள் (அந்தியேட்டி) நினைவு நாள் 12 ஒக்டோபர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 15 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சிசிலியம்மா பரமநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி சிவனடியான்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 14 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, செஞ்சோலை, பாரதி ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத் தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு பரம்சோதி கணபதிப்பிள்ளை

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பரம்சோதி கணபதிப்பிள்ளை அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 13 ஒக்டோபர் 2022 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, செஞ்சோலை, பாரதி ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பரம்சோதி கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கேமலதா விக்னராஜ்

புதுச்செம்மணி வீதி கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கேமலதா விக்னராஜ் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 12 ஒக்டோபர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கேமலதா விக்னராஜ் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகமுத்து கதிர்காமநாதன்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நாகமுத்து கதிர்காமநாதன் அவர்களின் 35வது ஆண்டு நினைவு நாள் 15 ஒக்டோபர் 2022 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நாகமுத்து கதிர்காமநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி




### பண்டிதர் திரு அலெக்ஸ்சாந்தர் மாஸ்டர்

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு மனுவேல்பிள்ளை செல்வராசா அலெக்ஸ்சாந்தர் (பண்டிதர் அலெக்ஸ் சாந்தர் மாஸ்டர்) அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 15 ஒக்டோபர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அவரது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திரு பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



08 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



10 ஒக்டோபர் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் துவாரகனின் 26வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் துவாரகன் தனது பெற்றோர்கள் சகோதரனுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



11 ஒக் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி செல்வராஜா கமலரஞ்சிதம் தம்பதிகளின் செல்வப்புதல்வி கீர்த்தனா (27 ஆக 2022) செல்வப்புதல்வி கீர்த்திகா (27 செப் 2022) ஆகியோரது பிறந்த நன்நாளுக்காக செல்விகள் இருவரும் தமது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



12 ஒக்டோபர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




12 ஒக் 2022 புதன்கிழமை புதுச்செம்மணி வீதி கல்லியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கேமலதா விக்னராஜ் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பரம்சோதி கணபதிப்பிள்ளை அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பரம்சோதி கணபதிப்பிள்ளை அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பரம்சோதி கணபதிப்பிள்ளை அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## கனடா வாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே! திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 11 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 10 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 423 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடை பெற்று வருகின்றது. இவ்வாண்டு 7 பிள்ளைகள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களது இடர்களைக் களையவும் கல்வியை மேம்படுத்தவும் இம்மாதம் 23 ஒக் 2022 ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ள நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். (விபரங்கள் 12ம் 13ம் பக்கத்தில் உள்ளது)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது




உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும்.

எமது கனடிய மண்ணிலும் அனைத்துமே விலையேற்றம் கண்டுள்ளமையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் 19 ஒக்டோபருக்கு முன்னதாக தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்புகளுக்கு

ஈழநாடு பரமேஸ் 416 841 9600



14 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
S. Christeen
416-258-6759

Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RE MAX Community Realty Inc.
Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated
KAMAL NAVARATNAM REAL ESTATE
Trusted and reliable services

UTHAYAS
SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

N.K.S
DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies
•Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX



முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
திருமதி நவநாதன் துஷி
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரி

# இன்னிசை மாலையும் இரா

அரவிந்தனின்




இசையில்
சுப்பர் சிங்கர் புகழ் புண்யா,
ஹரிகரசுதன்
மற்றும் கனேடிய தமிழ்ப் பாடகர்கள்
இணைந்து வழங்கும்

ஹரி

இன்

OCTOBER 23 2022
SUN @ 6:00PM

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST, SCARBO
(FINCH & KENNEDY)

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B
UNIVERSAL INC.
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment. 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife

தொடர்பு
ஈழநாடு பரமேஸ்
தயவு செய்து நுழைவுச்சீட்டு
நிகழ்வுகள் சரியாக மாலை 6
தங்கள் ஆதரவ

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான
இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
லோகன் இராசையா
416 991 1292
Can West Transport

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough
Mississauga Branch
Tel: 416.439.0224
Fax: 416.439.0226

Tekon
Banquet services & Catering
Neela Nadarajan
Event planner
Wedding Reception Engagements
Birthday Parties Puberty Ceremony
Bharathanatya Arangetram Any other Occasions
416.844.3018
416.995.2059

JESEETHA JEGANATHAN
Broker
Cell: 416 566 0337
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
www.jeseehomes.com
Century 21
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
JAY JEGANATHAN, BA
Sales Representative
Direct: (647) 963-2677
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
E-mail: jjrealtoronto@gmail.com
JEYSURESH JEGANATHAN
Sales Representative
Direct: (416) 616-4046
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
E-mail: jey.c21pc@gmail.com
வீடு வாங்க விற்க, அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கு...



VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com



நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarborough,ON M1X 0A7 - Canada. 647 702 2150


வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

யந்தி நினைவரங்கத்தில்

ரிகை 10வது ஆண்டாக நடாத்தும்



# ப்போசன விருந்தும் 2022



சுப்பர் சிங்கர் புகழ்

## புண்யா



ரைப்பட பாடகர்

## ரிஹரசுதன்

# னிசை மாலை

ROUGH

அன்பளிப்பு:

## VVIP: $200, VIP: $100

https://eelanadu.ca/dinner-and-music/

களுக்கு:

## ) - 416.841.9600

டன் மண்டபத்திற்கு வரவும்.

:00 மணிக்கு ஆரம்பமாகும்.

புக்கு நன்றிகள்


TechSource
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229



புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான
இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
ஈசன் கிருஷ்ணா
905-886-7399
SunLife Insurance



Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com



மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness • RESP
• Disability • RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance
Foresters
Industrial Alliance
Assumption Life



Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993



WEXFORD
WELLNESS CARE INC
✓ MASSAGE THERAPY
✓ PHYSIOTHERAPY
✓ ORTHOPAEDIC
✓ ACUPUNCTURE
✓ CHIROPRACTIC
✓ ORTHOTICS
301-240 Alton Towers Circle,
Toronto ON M1V 3Z3
647-349-5120
647-349-5121
wexfordclinic@gmail.com



மனங்களையும் மனைகளையும் வசந்தமாக்கும்
வசந்தம் சுப்பர்மார்க்கெட்
இலங்கை, இந்தியா மற்றும் பன்னாட்டு மளிகை பொருட்கள்
2900 Markham Road, Scarborough,
ON M1X 0C8
416 292 8585



KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197



Proudly Canadian Since 1983
Jyothi
அன்றும் இன்றும் என்றும்..
Experience the Taste
ஜோதி தயாரிப்புக்களை கேட்டு வாங்குங்கள்
416.477.5345
www.jyothifoods.com



அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# Awards Gala Night
Music, Dance & Dinner



TAMIL MIRROR AWARDS 2022

**17TH Year Anniversary**
**Celebrations & Awards Gala -2022**

Guest Speaker Sri. A. Kaliyamurthy
Former Superintendent of Police.,Tiruchirapalli District.

- உலக அளவில் பேச்சுலகில் யாருமே இதுவரை சாதித்திராத உலக சாதனையை 2018 ல் ஆண்டு நிகழ்த்திக் காட்டியவர்.
- 100 நாட்களில் 70 வேறுபட்ட இடங்களில், 70 மாறுபட்ட தலைப்புகளில் 1000 பேருக்கும் மேலானவர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டு எல்லாக் கூட்டங்களிலும் 1 மணி நேரத்திற்கு குறையாமல் தொடர்ந்து பேசியவர்.

CHINESE CULTURAL CENTRE. 5183 SHEPPARD AVE.E. SCARBOROUGH.

**NOV 06 SUNDAY 4PM**

INFO: 416 697 0126

தமிழ் மிரர் Tamil Mirror
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY

# ஜெனிவாத் தீர்மானம் 2022 தமிழ் அரசியலின் இயலாமை?




மற்றொரு ஜெனீவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறலை ஜெனீவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் கேட்டது சரி என்பதை இப்புதிய தீர்மானம் நிரூபித்திருக்கிறது. கடந்த ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகள் இணைந்து ஜெனீவாவுக்கு ஒரு கூட்டுக்கடிதத்தை அனுப்பின. அதில் பொறுப்புக்கூறலை ஜெனீவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்ற கோரிக்கையை இணைத்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான். இது நடந்து 20மாதங்களாகி விட்டன. பொறுப்புக்கு கூறலை ஜெனீவாவுக்கு வெளியே கொண்டு போகும் முயற்சியில் மூன்று கட்சிகளும் எதுவரை முன்னேறியுள்ளன?

நடந்து முடிந்த ஜெனிவாக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அங்கு போயிருந்தார். அங்கிருந்து அவர் வழங்கிய நேர்காணல்களில் அவர் ஒரு விடயத்தை திரும்பத் திரும்ப சுட்டிக் காட்டுகின்றார்.

அது என்னவெனில், கூட்டமைப்பும் சில புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளும் தொடர்ந்தும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை பலவீனப்படுத்தி வருகின்றன என்பதே அது. அதாவது ஜெனிவா தீர்மானத்தை முன் கொண்டு வரும் நாடுகளை நோக்கி கூட்டமைப்பு தமிழ்மக்களின் கோரிக்கையை வலிமையாக முன்வைக்கவில்லை என்பது அவருடைய முதலாவது குற்றச்சாட்டு.

இரண்டாவது குற்றச்சாட்டு, பிரித்தானியா, ஆவுஸ்ரேலியா, கனடா ஆகிய நாடுகளை மையமாகக் கொண்டியங்கும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் சில தொடர்ந்து தத்தமது நாடுகளின் அரசாங்கங்களுடைய விருப்பங்களுக்கு ஏற்ப செயல்பட்டு வருகின்றன என்பது. அதாவது மேற்படி நாடுகள் ஜெனிவாவில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை தமது பூகோள அரசியல் இலக்குகளுக்காக நீர்த்துப் போகச் செய்யும் பொழுது அது விடயத்தில் மேற்படி புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு விசுவாசமாக கீழ்படிவாக செயல்படுகின்றன என்ற தொனிப்பட அவர் குற்றம் சாட்டுகிறார்.

ரணில் விக்ரமசிங்கவின் முன்னைய ஆட்சிக் காலத்தில், 2015ஆம் ஆண்டு நிலைமாறுகால நீதிக்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது தமிழ்த் தரப்பில் கூட்டமைப்பு அந்த தீர்மானத்தை ஆதரித்தது. அது நிலைமாறுகால நீதியின் பங்காளியாக மாறியது. அவ்வாறே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் சிலவும் நிலைமாறு கால நீதியை ஏற்றுக் கொண்டன. அதே சமயம் இன்னொரு பகுதி புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தாயகத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகளும் நிலைமாறுகால நீதியை ஏற்றுக்கொள்ளவில்லை. அவை இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியைக் கேட்டன.

எனினும்,கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஐநாவுக்கு அனுப்பிய கூட்டுக் கடிதத்தில் கூட்டமைப்பு எனைய இரண்டு கட்சிகளோடு இணைந்து பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று கேட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும் என்று அக்கடிதம் கேட்டிருந்தது. நிலைமாறுகால நீதியைப் பரிசோதித்தோம் அதில் தோல்வியுற்று விட்டோம் என்று சுமந்திரன் வவுனியாவில் வைத்துச் சொன்னார். ஆனால் ஜெனீவாத் தீர்மானத்தின் சீரோ டிராப்ட் வெளிவந்த பொழுது கூட்டமைப்பு தலைகீழாகி நின்றது.

இப்பொழுதும் கூட்டமைப்பு பொறுப்புக்கூறலை ஜெனீவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கருக்குழு நாடுகளின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கவில்லை என்று கஜேந்திரன் குற்றஞ்சாட்டுகிறார். அது போலவே அவர் குற்றஞ்சாட்டும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளும் பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்துவதில்லை என்ற தொனிப்பட அவருடைய குற்றச்சாட்டு அமைகிறது.

இக் குற்றச்சாட்டுகளை தமிழில் அரசியல் விமர்சனக் கட்டுரைகளை எழுதும் பலரும் கூட்டமைப்புக்கு எதிராக முன்வைத்து வருகிறார்கள். குடிமக்கள் சமூகங்கள் மத்தியிலும் அவ்வாறான குற்றச்சாட்டுகள் உண்டு. தவிர காணாமல் போனவர்களுக்கான அமைப்புகள் உட்பட பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்புகளும் கூட்டமைப்பின் மீது விமர்சனங்களைத் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன. இந்த விமர்சனங்களின் விளைவாகத்தான் கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு அதன் ஆசனங்களில் ஆறை இழந்தது. அதன் ஏகபோகம் சரிந்தது.

ஆனால் அவ்வாறு இழந்த ஆறு ஆசனங்களையும் யார் பெற்றார்கள்? மூன்றே மூன்று ஆசனங்களைத் தான் மாற்று அணி பெற்றது. எனைய மூன்று ஆசனங்களும் தமிழ்த்தேசியப் பரப்புக்கு வெளியே போயின. அவ்வாறு மூன்று ஆசனங்கள் தமிழ்தேசிய பரப்புக்கு வெளியே போனதற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் கூட்டுப் பொறுப்பை ஏற்கவேண்டும். ஒரு பலமான மாற்று அணியைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அரசியல் தரிசனம் அக்கட்சியிடம் இன்றுவரை இல்லை. எப்பொழுதும் ஏனைய கட்சிகளை குறை கூறி ஏனைய கட்சிகளில் குற்றம் கண்டு பிடித்து தங்களைப் பரிசுத்தர்களாக காட்டிக் கொள்ளும் ஒரு போக்குதான் அக்கட்சியிடம் இன்றுவரை உண்டு. அண்மையில் திலீபனின் நினைவுத்தூபி அவமதிக்கப்பட்ட போதும் அக்கட்சி தன் அரசியல் எதிரிகளைத் தான் குற்றஞ்சாட்டியது.

தன் உள் அரசியல் எதிரிகளை குற்றச்சாட்டுவது என்பது தேர்தல்மைய அரசியலின் ஒரு பகுதி தான். ஆனால் ஈழத்தமிழ் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் அதுமட்டுமே தேச நிர்மாணத்தின் பிரதான பகுதியாக அமைய முடியாது. ஈழத்தமிழர்கள் தொடர்ச்சியான இனப்படுகொலையால் நீர்த்துப் போன ஒரு மக்கள் கூட்டம். புலப்பெயற்சி, தோல்வி, கூட்டு காயங்கள், காட்டிக் கொடுப்புகள் போன்றவற்றால் தொடர்ந்தும் சிதறிப் போயிருக்கும் ஒரு மக்கள் கூட்டம். எனவே இந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் தேர்தல் அரசியலை முன்னெடுக்கும் கட்சிகள் தமது அரசியல் எதிரிகளை திட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதை விட முக்கியமாக தாம் சரியெனக் கருதும் ஓர் அரசியல் இலக்கை நோக்கி மக்களைத் திரட்ட வேண்டும்.

ஒரு தேசத் திரட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும். அதாவது தேர்தல்மைய அரசியலை எப்படி ஒரு தேச நிர்மாணத்தின் பகுதியாக மாற்றலாம் என்று சிந்திக்க வேண்டும். ஆனால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் உட்பட கூட்டமைப்பை விமர்சிக்கும் பலரிடமும் அவ்வாறான அரசியல் தரிசனம் உண்டா? என்ற கேள்வியை கடந்த 13 ஆண்டு கால அனுபவம் கேட்க வைக்கின்றது.

கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்களின் அரசியலானது புரோஅக்டிவ் **proactive**- ஆக, அதாவது தானாக ஒன்றைக் கட்டியெழுப்பும் அரசியலாக இல்லை.அது ரியாக்டிவ்- சநயஉவைைந- ஆகத்தான் அதாவது பதில் வினையாற்றும் அரசியலாகத் தான் காணப்படுகிறது.

அதாவது தேசத்தை நிர்மாணித்தல் என்பது எதிர் தரப்புக்கு எதிர்வினை ஆற்றும் தற்காப்பு நிலை அரசியலாகதான் மாறியிருக்கிறது. மாறாக தேசத்தை நிர்மாணிப்பதற்கான நிறுவனங்களை உருவாக்கி அதனூடாக தன் உள் அரசியல் எதிரியையும் வெளி எதிரிகளையும் எப்படித் தோற்கடிக்கலாம் என்ற சிந்தனை கூட்டமைப்பிடமும் இல்லை. கூட்டமைப்பின் எதிரிகளிடமும் இல்லை.

கூட்டமைப்பின் அரசியல் தவறுகள் காரணமாகத்தான் கடந்த பொதுத் தேர்தலில் அக்கட்சி ஏகபோகத்தை இழந்தது. ஆனால் அந்த தோல்வியை தன்னுடைய முழுமையான வெற்றியாக மாற்றிக் கொள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் முடியவில்லை. எனைய தமிழ்த் தேசிய கட்சிகளாலும் முடியவில்லை. இதனால் தமிழ் வாக்குகள் மேலும் சிதறி, தமிழ்மக்களின் பேரபலம் சிதைந்தது. அதாவது தேசத் திரட்சி பலவீனமடைந்தது.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

இப்பொழுதும் ஜெனிவா விவகாரத்தில் கூட்டமைப்பு செய்வது பிழை என்றால் ஏனைய கட்சிகள் அதை தோற்கடிக்க வேண்டும்.அதற்கு வேண்டிய மக்கள் ஆணையை முதலில் பெற வேண்டும். அந்த மக்கள் ஆணையை பெறுவதற்கு ஒரு பலமான மாற்று அணியை கட்டி எழுப்ப வேண்டும். மக்களாணையை பெற்ற பின் பொருத்தமான வெளியுறவு கொள்கை ஒன்றை வகுத்து வெளியுறவு கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அதனூடாக ஜெனிவாவையும் இந்தியாவையும் எனைய தரப்புகளையும் அணுக வேண்டும். ஆனால் அப்படியான சிந்தனைகளையோ செயற்பாடுகளையோ தமிழ் அரசியலில் மிகக் குறைவாகவே காண முடிகிறது. ஒப்பிட்டுளவில் அதிக ஆசனங்களைப் பெற்ற கூட்டமைப்போடு தான் வெளியுலகம் பேசும்.

தன் உள் அரசியல் எதிரியைத் திட்டித் தீர்ப்பதிலேயே தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் சக்தி பெருமளவுக்கு விரயம் செய்யப்படுகிறது. இது ஒரு விதத்தில் நெகட்டிவ் ஆனது. மாறாக பொசிட்டிவாக தனக்கு சரி என்று தோன்றும் ஓர் அரசியல் இலக்கை முன்வைத்து தேசத்தைக் கட்டியெழுப்ப இந்த கட்சிகளால் முடியவில்லை. இதனால் தான் கடந்த 13 ஆண்டுகளாக பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை. பேராசிரியர் ஜீட் லால் கூறுவது போல தமிழ்மக்கள் கடந்த 13 ஆண்டுகளாக குறிப்பிட்டுச் செல்லக்கூடிய வெற்றிகள் எதையும் பெற்ற முடியவில்லை. வேண்டுமானால் நெருப்பை அணையாமல் பாதுகாத்தோம் என்று கூறித் திருப்திப்படலாம்.

தனது உள் அரசியல் எதிரிகளைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்து அவர்களுக்கு எதிரான வியூகங்களை வகுப்பதிலேயே தமிழ்ச் சக்தி வீணாகிக் கொண்டிருக்கிறது. மாறாக, ஆக்கபூர்வமான விதத்தில் பொசிட்டிவாக, புரோஅக்டிவாக, ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு வேண்டிய வழி வரைபடத்தை தயாரித்து முன் செல்லும்போது அரசியல் எதிரிகள் படிப்படியாக உதிர்ந்து போய் விடுவார்கள்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் மூன்று கட்சிகளும் கூட்டாக கடிதமெழுதி கிட்டத்தட்ட 20 மாதங்கள் கழிந்து விட்டன. இந்த 20 மாதங்களிலும் தாம் ஜெனிவாவை நோக்கி முன் வைத்த கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இக்கட்சிகள் என்னென்ன செய்திருக்கின்றன? கூட்டமைப்பு தொடர்ந்து வாக்காளர்களை ஏமாற்றுகிறது என்று சொன்னால், அவ்வாறு ஏமாற்றாத ஏனைய கட்சிகள் கடந்த 20மாதங்களாக என்ன செய்திருக்கின்றன? கூட்டமைப்பு ஏமாற்றுகிறது என்று சொன்னால் மட்டும் போதாது. தாங்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றும் சொல்ல வேண்டும். பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகும் விடயத்தில் இவர்கள் (20ம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்
சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 | TEL: 416-321-6104
Website: www.ayyappan.ca | Facebook: Canada Sri Ayyappan Hindu Temple

## MANDALA MAKARA FESTIVAL - 2022
## மண்டல மகர விரத விஞ்ஞாபனம்





### ஸ்ரீஐயப்பன் மாலை அணியும் வைபவம்
### SRI AYYAPPAN GARLAND OCCASION
### 16.11.2022 புதன்கிழமை

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம், அதிகாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும்.

மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும். உபயங்கள் செய்ய விரும்பும் அடியார்களும் முன்கூட்டியே காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.


### விசேட ஹோமம் – மாலை அணிதல்


16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம். தொடர்ந்து சாஸ்தா ஹோமம், துளசிமாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இடம் பெறும்.

*இறை சேவையிலுள்ள*
*ஆலய அறங்காவலர் சபை*

# உருத் தெரியாது போகும் அபாயத்தில் கொக்குளாய் முதல் நாயாறு வரையிலான

# 6 தமிழ் கிராமங்கள்




இலங்கை மகாவலி அதிகாரசபை சபையின் 'எல்' வலயம் விசேட ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள முஹுதுபட பத்து (கரைத்துரைப்பற்று) பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின் கொக்குளாயிலிருந்து நாயாறு வரை அமைந்துள்ள ஆறு கிராம சேவகர்கள் பிரிவுகளின் நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் என்ற தலைப்பில் ஐ.ஆர். 12022-40 இலக்கமிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் கடந்த மாதம் 26ஆம் திகதி தயாரிக்கப்பட்டு நீர்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுவதற்காக தயார்ப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நகர்வு பற்றிய தகவல்கள் கசிந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை கடந்த புதன்கிழமை தொடர்பு கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் மறுதினமான வியாழக்கிழமை, பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனைத் தொடர்பு கொண்ட ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, அமைச்சரவை அனுமதிக்கான பத்திரங்கள் பற்றிய குழு கூட்டத்தில் மகாவலி 'எல்' வலயத்துக்கான விசேட ஆளுகையைக் கோரும் பத்திரத்தினை முன்னகர்த்துவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறுத்தியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த தகவல் பிரச்சினையை கையில் எடுத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆறு கிராமசேவகர் பிரிவு வாழ் மக்கள் ஆகியோருக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் நிம்மதிப் பெருமூச்சை விடுவதற்கு இடமளித்திருக்கின்றது.

ஆனால், அமைச்சரவைப் பத்திரத்தினை நகர்த்தும் முயற்சி நிறுத்தப்பட்டிருப்பதால் மகாவலி 'எல்' வலயச் செயற்பாடு நிரந்தரமாக கைவிடப்பட்டுவிட்டது என்று அர்த்தம் கொள்ள முடியாது. 'புயலுக்கு முந்திய அமைதி' போல அடுத்ததொரு பெருநகர்வுக்கு முன்னதான சிறிய 'பின்னகர்வு' தான் இது.

நாட்டின் பணவீக்கம் 69.8சத வீதமாக இருந்து கொண்டிருக்கையில் தான் மகாவலி 'எல்' வலயச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை பத்திரத்தினை விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சர் ரொஷான் ரணசிங்க முன்னகர்த்த முயன்றிருக்கின்றார்.

இந்தச் செயற்பாடொன்றே மகாவலி 'எல்' வலய செயற்றிட்டத்தை எந்தச் சூழலிலும் நாட்டின் ஆட்சிப்பீடத்தில் இருக்கும் எந்தவொரு அரசாங்கமும் நிச்சயம் கைவிடப்போவதில்லை என்ற செய்தியை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

தேசிய ரீதியாக அபிவிருத்தி கருத்திட்டங்கள் செயற்படுத்துகையில் குறைந்தளவு கவனம் செலுத்தப்பட்டுள்ள முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள ஆற்றுப் படுக்கைகளுடன் தொடர்புடையதாகவுள்ள அடுக்கடுக்கான குளத் தொகுதிகளின் இடவமைப்பை ஆராய்ந்த வண்ணம் சிறு, நடுத்தர மற்றும் பாரிய நீர்த்தேக்கங்களை நிர்மாணித்து குறைந்தளவில் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக அபிவிருத்தி அடைந்துள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதே நோக்கம்' என்ற கோசத்துடன் 1988.04.14 மற்றும் 2007.03.07 ஆகிய திகதிகளில் இரு வர்த்தமானி அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டதை இலகுவில் மறந்துவிட முடியாது.

அத்துடன், குறித்த வர்த்தமானி அறிவிப்புக்களுக்கு அமைவாக, 196.987 ஹெக்டெயர்களை உள்ளடக்கி மகாவலி 'எல்'வலயம் பிரகடனப்படுத்தப்பட்டதோடு, வன ஜீவராசிகள், மற்றும் வனப் பராமரிப்பு திணைக்களத்துக்கு உரித்தான பிரதேசங்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பிரதேசங்களைத் தவிர, 42.847 ஹெக்டெயரில் மகாவலி அதிகாரசபையினால் முதல்நிலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு 29.953 ஹெக்டெயரில் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த பகுதியில் 2012முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் நீர்ப்பாசன அபிவிருத்திக்கு அப்பால் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக திறைசேரியினால் 3957மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக மகாவலி அதிகாரசபை உறுதிப்படுத்தியுள்ளது.

அதேநேரம், மகாவலி 'எல்' வலயத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நாயாறு முதல் கொக்குளாய் வரையிலான கொக்குளாய் கிழக்கு, கொக்குளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு, செம்மலை ஆகிய ஆறு கிராம சேவகர் பிரிவுகளின் 15.743ஹெக்டெயரில் எவ்விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மேற்படி ஆறு கிராம சேவகர் பிரிவுகள் உட்பட மகாவலி 'எல்' வலயத்திற்கான வாழ்வியல், வாழ்வாதார நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மூன்று தசாப்தங்களுக்கு முன்பிருந்தே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 1984ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்படும் தீவிர ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் ஏற்கனவே தமிழர்களின் பூர்வீக பகுதியான மணலாறு கையகப்படுத்தப்பட்டு விட்டது.

மணலாறு, 'வெலிஓயா' என்று பெயர் மாற்றப்பட்டு, தற்போது 9 தனிச் சிங்கள கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டதாகவும் தென்னிலங்கையில் இருந்து வருவிக்கப்பட்ட 6000 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்ட பகுதியாகவும் காணப்படுகின்றது.

இந்தச் செயற்பாடுகள் மகாவலி 'எல்' வலய விஸ்தரிப்பு என்ற தலைப்பின் கீழாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தவொரு விடயமே மகாவலியின் பெயரால் தமிழர்களின் பூர்வீகம் அழிக்கப்பட்டமைக்கான வடுக்களின் 'வலிகளை' உணர்த்தி நிற்கிறது.

இவ்வாறான நிலையில், வெலிஓயாவின் ஜனக்புர, கிரிபெவன்வெவ ஆகியவற்றின் எல்லைகளாகவுள்ள கொக்குளாய், கொக்குத்தொடுவாய் முதல் நாயாறு வரையில் உள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை கையகப்படுத்துவதை இலக்கு வைத்து போரின் பின்னரான காலத்தில் தீவிரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், அவ்விதமான ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், தமிழர் தரப்பால் முட்டுக் கட்டைகள் இடப்பட்டிருக்கின்றன. அவற்றில் குறிப்பாக, 2018 ஆகஸ்ட் 28 அன்று பாரிய மக்கள் போராட்டம் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து மகாவலி விரிவாக்கத்தை நிறுத்துமாறு 2020 ஒக்டோபர் 23இல் மூன்று கட்சித்தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடிதம் மூலம் கோரியிருந்தார்கள். 2021 மே 7இல் மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளருக்கு சாள்ஸ் நிர்மலநாதன் தனிநபராக கடிதம் அனுப்பினார்.

தொடர்ந்து அப்போது விடயதானத்துக்கு பொறுப்பாக இருந்த சமல் ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு மீளாய்வுக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டதோடு அக்குழுவின் 'களஆய்வு' அறிக்கை வெளியிடப்படும் வரையில் 'எல்'வலயம் விஸ்தரிப்புச் செய்வதில்லை என்றும் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

பின்னர், இந்த ஆண்டின் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தினையும் மேற்கொண்டனர்.

இறுதியாக, புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போதும், மகாவலி 'எல்' வலய விஸ்தரிப்பை நிறுத்துமாறு கோரப்பட்டபோது சதகமான சமிக்ஞை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு மகாவலி 'எல்' வலயத்தில் உள்ள மேற்படி ஆறு கிராமசேவகர் பிரிவுகளையும் கையகப்படுத்தும் முயற்சிகள் 'உறை' நிலையில் வைக்கப்பட்டிருந்த சூழலில் தான் தற்போது அமைச்சரவை அனுமதியுடன் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கங்கணங் கட்டப்பட்டுள்ளது.

அதே நேரம் அமைச்சரவையூடான முயற்சியின் போது, அதிகாரசபையின் அதிகாரங்களுக்கு அமைய திட்டமொன்றை தயாரித்து செயற்பாட்டை முன்னெடுக்கப்படுதல், பிரதேச செயலாளர்கள் இதுவரையில் முன்னெடுத்துள்ள காணி நிர்வாக தகவல்களை மகாவலி அதிகாரசபையிடத்தில் கையளிப்பதோடு காணிக் கச்சேரிகள் நடத்தப்படும் சந்தர்ப்பங்களில் பிரதேச செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் பங்களிப்பையும் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல், புதிய அபிவிருத்தி பிரதேசங்களை இணைத்தல், அதற்கான உத்தியோகத்தர்களை வதிவிட கருத்திட்ட முகாமையாளரின் கீழ் நிர்வகிக்கப்படுதல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இவ்வாறான அனுமதி கோரலானது, பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளர் உள்ளிட்டவர்களின் காணிகளை நிர்வகிக்கும் அதிகாரங்களை நேரடியாக மகாவலி அதிகாரசபையின் கீழாக தம் வசப்படுத்துவதற்கான முஸ்தீபாகும்.

அதேநேரம், இந்த ஆறு கிராம செயலாளர் பகுதியில் 1171குடும்பங்கள் காணப்படுவதாகவும், அதில் 901தமிழ் குடும்பங்களும் 269சிங்களக் குடும்பங்களும் (கொக்குத்தொடுவாயில் வாடிகளை கையகப்படுத்தி குடியேறியுள்ள 213 தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் குடும்பங்களும் அடக்கம்) ஒரு முஸ்லிம் குடும்பமும் உள்ளது.

ஆனால் 1984இல் 2.910குடும்பங்கள் இப்பிரதேசங்களை விட்டு வெளியேறியிருந்த நிலையில் தற்போது 1.279 குடும்பங்கள் இருப்பதாக புள்ளி விபரங்கள் காணப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியதாக உள்ளது.

எனவே தற்போது நிறுத்தப்பட்டதாக கூறப்படும் அமைச்சரவைப் பத்திரம் மீண்டும் நகர்த்தப்படாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதங்களும் இல்லை. அவ்வாறு நகர்த்தப்பட்டால் மகாவலி 'எல்' வலய விரிவாக்கம் செவ்வனே முன்னெடுக்கப்படும். ஆகவே, விரிவாக்கத்துக்கு முன்னரான 'விளைவு மிக்க' செயற்பாடுகளே நிரந்த முற்றுப் புள்ளிக்கான கதுவுகளைத் திறக்கும்.

நன்றி:- வீரகேசரி

# இன்னொரு ஜெனிவாத் தோல்வி

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



2013இல் 13 வாக்குகளையும், 2014இல் 12 வாக்குகளையும், 2021இல் 11 வாக்குகளையும் திரட்டிக் கொள்ளக் கூடிய நிலையில் இருந்த இலங்கைக்கு இம்முறை வெறும் ஏழு வாக்குகளே கிடைத்துள்ளன.

சர்வதேச அரங்கில் இலங்கையின் இராஜதந்திரம் தோல்வியை நோக்கிப் பயணம் செய்கின்றமையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவயின் 51 ஆவது அமர்வில் இலங்கை குறித்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு முடிவு துலாம்பரமாக காட்டியுள்ளது

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பான மற்றொரு தீர்மானம், பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

51-1என அழைக்கப்படும் இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 20 நாடுகளும், எதிராக 7 நாடுகளும், வாக்களிக்க, 20 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்தன. இலங்கைக்கு மிக குறைந்த வாக்குகளே கிடைத்திருப்பது முக்கியமானதொரு இராஜதந்திரப் பின்னடைவு. அதேவேளை இந்த தீர்மானத்தில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான புதிய விடயங்கள் உள்ளடக்கப்படாமல் அல்லது அதனை விரைவுபடுத்தும் பொறிமுறையைப் பரிந்துரைக்காமல் நழுவியிருப்பதும், இலங்கைக்கு மேலதிகமாக 2 வருட காலஅவகாசம் கொடுக்கப்பட்டிருப்பதும், பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழர்களுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தும் தமிழர் தரப்பின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டிருப்பதானது, இந்த தீர்மானம், இலங்கைக்கு பின்னடைவை ஏற்படுத்தியிருக்கும் நிலையிலும், தமிழர் தரப்புக்கு வெற்றியாக கொண்டாட முடியாத நிலையை உருவாக்கியிருக்கிறது.

ஏற்கனவே 2021 மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட, 46-1 தீர்மானத்தை அடியொற்றியதாக உள்ள 51-1 தீர்மானத்தில், பொருளாதார குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலும், அதனைச் சார்ந்த விடயங்களும் மாத்திரம் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

தீர்மான வரைவை பேரவையில் சமர்ப்பித்து உரையாற்றிய, பிரித்தானியாவின் வதிவிடப் பிரதிநிதி, சைமன் மான்லி செயற்பாட்டுப் பந்திகள் 8 மற்றும் 18 என்பனவே முக்கியமானவை என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

செயற்பாட்டுப் பந்தி 8, எதிர்கால நீதிமன்ற செயற்பாடுகளுக்கு உதவும் வகையில், மீறல்களுக்கான ஆதாரங்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்து, பாதுகாக்கும் கட்டமைப்பை வலுப்படுத்தும் விடயங்களை உள்ளடக்கியது.

செயற்பாட்டுப் பத்தி 18, இரண்டு வருட காலஅவகாசத்தை வழங்குகின்ற விடயங்களை உள்ளடக்கியிருக்கிறது.

பொருளாதாரக் குற்றங்கள் குறித்து இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதும், அதற்குப் பொறுப்புக் கூறுவதற்கு வலியுறுத்தியுள்ள போதும், அதனை முக்கியமானதொரு விடயமாக, பிரித்தானிய பிரதிநிதி சைமன் மான்லி தனது உரையில் சுட்டிக் காட்டியிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. இதனை இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், அமைதியை ஊக்குவிக்கும் தீர்மானம் என்றே, அதனை முன்வைத்த அனுசரணை நாடுகள் கூறுகின்றன. ஆனால், இது நாட்டின் அரசியலமைப்புக்கு எதிரானது என்பதால், இந்த தீர்மானத்தை இலங்கை




அரசு நிராகரித்திருப்பதுடன் இதனை இலங்கைக்கு எதிரான தீர்மானமாகவும் அடையாளப்படுத்தியிருக்கிறது. இந்த தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் ஏற்கனவே வெளிவந்த அல்லது கடந்த தீர்மானத்தின் தொடர்ச்சியாக அமைந்திருக்கும் நிலையில், இந்த தீர்மானத்தை எதிர்ப்பதில் இலங்கை ஏன் தோல்வியைச் சந்தித்தது என்பதே முக்கியமாக ஆராயப்பட வேண்டியது.

வாக்கெடுப்புக்கு முன்னரே, இம்முறை குறைந்தளவு நாடுகள் தான், இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்பதை அரசாங்கம் எதிர்பார்த்தது.

வாக்கெடுப்புக்கு முதல் நாள், ஜெனிவாவில் இருந்து இணையவழியில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதனை ஒப்புக் கொண்டிருந்தார்.

வாக்கெடுப்புக்குப் பின்னர் அவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போதும், இது எதிர்பாராத முடிவு அல்ல என தெரிவித்திருந்தார்.

தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்க சில நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது என்பதை அறிந்திருந்தோம்.

அதைவிட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமைப்பு மாறிவிட்டது. அங்கு எமது நட்பு நாடுகள் சில இல்லை. சில நாடுகள் வாக்கெடுப்பில் இருந்து விலகிக் கொண்டன என்று குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்ற போது, பல்வேறு நாடுகள் பல்வேறு அழுத்தங்களைச் சந்திப்பது வழக்கமான ஒன்று தான். அது இந்த முறை புதிதாக நடந்த ஒரு விடயமல்ல.

2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாக மிக குறைந்தளவு வாக்குகள் கிடைத்திருப்பது இம்முறை தான்.

2012இல் 15 நாடுகளின் ஆதரவைப் பெற்ற இலங்கை, 2013இல் 13 வாக்குகளையும், 2014இல் 12 வாக்குகளையும், 2021இல் 11 வாக்குகளையும் திரட்டிக் கொள்ளக் கூடிய நிலையில் இருந்தது. ஆனால் இந்தமுறை அந்த ஆதரவு ஒற்றை இலக்கத்துக்கு, அதாவது 7 ஆக சுருங்கியிருக்கிறது.

அதேவேளை, தீர்மானத்துக்கு ஆதரவாக அளிக்கப்பட்ட வாக்குகள், அதிகரித்திருப்பதாக கருத முடியாது.

2012இல் தீர்மானத்துக்கு ஆதரவாக, 24 வாக்குகள் கிடைத்திருந்தன. 2013 இல் அது 25 ஆக அதிகரித்தது.

2014இல் 23 ஆக குறைந்து, 2021இல் 22 ஆக சரிந்து, தற்போது 20 என்ற நிலைக்கு வந்திருக்கிறது.

அதாவது கடந்த 11 ஆண்டுகளில், இலங்கைக்கு குறித்த தீர்மானத்துக்கு ஆதரவாக அளிக்கப்பட்ட ஆக குறைந்த வாக்குகளும் இது தான். அதே வேளை, வாக்கெடுப்பை புறக்கணித்த நாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்திருக்கிறது. 2012 மற்றும் 2013இல் 8 நாடுகளும், 2014 இல் 12 நாடுகளும், 2021இல் 14 நாடுகளும் வாக்கெடுப்பை புறக்கணித்து, தற்போது அந்த எண்ணிக்கை 20 ஆக அதிகரித்திருக்கிறது.

2021 மார்ச்சில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், வாக்கெடுப்பில் தோல்வியடைந்த போதும், தீர்மானத்தை எதிர்த்த 11 நாடுகள், புறக்கணித்த 14 நாடுகள் என, 25 நாடுகள் தங்களின் பக்கமே இருப்பதாகவும், 47 நாடுகள் அங்கம் வகிக்கும் பேரவையில் பெரும்பாலான நாடுகள் தங்களின் ஆதரவு இலங்கைக்கு இருப்பதாகவும் அப்போதைய வெளிவிவகார அமைச்சரும், தற்போதைய பிரதமருமான தினேஸ் குணவர்த்தன கூறியிருந்தார். ஆனால், இந்தமுறை அரசாங்கம் அவ்வாறு பிரசாரம் செய்யாது. ஏனென்றால், தங்களுக்கு போதிய ஆதரவு இல்லை என்று முன்னரே கூறி விட்டது.

கடந்த முறையை விட இலங்கைக்கு 4 வாக்குகள் குறைவாக கிடைத்துள்ளன. இதற்கு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமைப்பு மாறியுள்ளதை ஒரு காரணமாக குறிப்பிட்டிருக்கிறார் அலி சப்ரி.

இலங்கைக்கு வழக்கமான ஆதரவை வழங்கும், ரஷ்யாவும், பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் ஆகிய மூன்று நாடுகளும் இந்த ஆண்டு பேரவையில் அங்கத்துவ நாடுகளாக இல்லை.

அடுத்து கடந்த முறை இலங்கையை ஆதரித்த சோமாலியா இந்த முறை, வாக்கெடுப்பை புறக்கணிக்கும் முடிவுக்கு வந்து விட்டது.

இதனால் தான், பொலிவியா, சீனா, கியூபா, எரித்ரியா, பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் வெனிசுவேலா என, இலங்கைக்கு ஆதரவான வாக்குகள் 7 ஆக குறைந்தன.

இலங்கைக்கு ஆதரவளிக்கும் நேபாளம் இந்தியாவின் அழுத்தங்களை அடுத்து வாக்கெடுப்பை புறக்கணித்ததாக கூறப்படுகிறது.

அதேவேளை, இந்த ஆண்டு புதிய உறுப்பு நாடுகளாக சேர்க்கப்பட்ட நாடுகள் இலங்கைக்கு கை கொடுப்பவையாகவும் இருக்கவில்லை.

ஆர்ஜென்ரீனா, பெனின், கமரூன், எரித்திரியா, பின்லாந்து, கம்பியா, ஹொண்டுராஸ், இந்தியா, கசகஸ்தான், லிதுவேனியா, லக்சம்பர்க், மலேசியா, மொன்ரெனீக்ரோ, பரகுவே, கட்டார், சோமாலியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகியனவே 2022 2024 காலப்பகுதிக்கான புதிய உறுப்பு நாடுகளாக இணைந்தவை.

(19ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஜெனிவா தீர்மானம்:- நாடுகளின் நலன்கள் - தமிழர்கள் எதிர்பார்ப்பு?

ஜெனிவா ஆரவாரம் முடிவுற்றது. எதிர்பார்க்கப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. முன்னரைப் போலவே தமிழ் தரப்புக்கள், தங்களின் ஏமாற்றத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஜெனிவா அரசியலை விளங்கிக் கொள்வது தொடர்பாக, எனது முன்னைய கட்டுரைகளிலும் குறிப்பிட்டிருக்கின்றேன்.

ஜெனிவாவின் அரசியலை புரிந்து கொண்டவர்களுக்கு இதில் எந்த ஆச்ச ஷரியமும் இல்லை. இனி வரப்போகும் தீர்மானங்களும் கூட, தமிழர்களின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் பூர்த்தி செய்யப் போவதில்லை. பேரவையின் உறுப்பு நாடுகளின் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் தான் தீர்மானங்கள் அமையும்.

இம்முறை 20 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றன. எதிராக 7 நாடுகள் வாக்களித்திருக்கின்றன. 20 நாடுகள் வாக்களிப்பில் பங்கு கொள்ளவில்லை. வாக்களிப்பில் பங்கு கொள்ளாத நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இதுவும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். காம்பியாவும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நாடுகளில் ஒன்றாகும். இந்த இடத்தில் காம்பியா பற்றி குறிப்பிடுவதற்கு ஒரு விசேட காரணமுண்டு.

நமது சூழலில் சிலர் அடிக்கடி ரோகிங்கியா என்னும் சொல்லை பயன்படுத்துவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். மியன்மார் நாட்டின் வடபகுதியில் அமைந்துள்ள ரிங்கின் என்னும் மானிலத்தில் வாழ்ந்த மக்களையே ரோகிங்கியா முஸ்லிம்கள் என்பர்.

இந்த பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம் மக்கள் மீது, மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன. இவர்களை அந்தப் பகுதியிலிருந்து துரத்தியடிக்கும் நோக்கில், அவர்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்காண மக்கள் கொல்லப்பட்டனர். மியன்மார் அடிப்படையில் ஒரு பௌத்த நாடு. சிங்களவர்களை போன்று தேரவாத பௌத்தத்தை பின்பற்றும் மக்களை பெரும்பாண்மையாக கொண்டிருக்கும் நாடு.

ரோகிங்கியா முஸ்லிம் மக்களை, மியன்மாரின் மக்களாக ஏற்றுக் கொள்ள பௌத்த ஆளும் வர்க்கம் மறுக்கின்றனது. 2014 சனத்தொகை கணக்கெடுப்பின் போது, ரோகிங்கியா முஸ்லிம்களை மக்களாக ஏற்றுக் கொள்ள மியன்மார் நிர்வாகம் மறுத்தது.

ரோகிங்கியா முஸ்லிம்கள் மீது கடுமையாக வெறுப்புற்றிருந்த பௌத்த பிக்குகள் மற்றும் மியன்மாரின் ஆளும் வர்க்கம் 2017இல், முஸ்லிம்களின் வீடுகளை எரித்து, அவர்களை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்த முற்பட்டது. இதன் போது, ஒரு மாத காலத்தில், சுமார் 6700 பேருக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இதில் 700 மேற்பட்டவர்கள் ஐந்து வயதிற்கும் குறைவான சிறுவர்களாவர்.

2017இல், ரோகிங்கியா முஸ்லிம்கள் மத்தியில் இயங்கி வரும், ரொகியங்கா ஆயுத அமைப்பு, பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதலை நடத்தியது. இதனைத் தொடர்ந்தே ரோகிங்கியா முஸ்லிம்களை அழிக்கும் நடவடிக்கைகளில் பௌத்த பிக்குகள் ஈடுபட்டனர். இதற்கு தலைமை தாங்கிய பிக்குவின் பெயர் விராது. 969 என்னும் பௌத்த தேசியவாத அமைப்பின் தலைவராக இருக்கின்ற விராதுவை, 2014இல், பொது பல சேனா கொழும்பிற்கு அழைத்திருந்தது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தகவல்களின்படி, மியன்மார் இராணுவம் ரோகிங்கியா பெண்கள் பலரை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி, கொலை செய்திருக்கின்றனர். சுமார் 217 கிராமங்கள் முற்றிலுமாக எரிக்கப்பட்டிருக்கின்றன. இனப்படுகொலை நோக்கிலேயே திட்டமிட்ட வகையில் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இதனை விசாரித்த ஐ.நா விசாரணையாளர்கள், மியன்மார் இராணுவம் இனப்படுகொலை நோக்கத்தோடு, மக்களை தாக்கியதாக குறிப்பிடுகின்றது.

இந்த விடயத்தில் முஸ்லிம் நாடுகள் கரிசனை காண்பித்தன. முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பான இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான நாடுகளின் அமைப்பு (**Organisation of Islamic Cooperation**). இந்த விடயத்தில் கவனம் செலுத்தியது.



இந்த அமைப்பின் ஆதரவுடன் தான் காம்பியா இந்த விடயத்தில் ஈடுபட்டது. காம்பியா ஒரு மேற்கு ஆபிரிக்க இஸ்லாமிய நாடாகும். ரோகிங்கியா முஸ்லிம்களின் விடயத்தை சர்வதேச நீதிமன்றம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்காக, இஸ்லாமிய நாடுகளுக்கான ஒத்துழைப்பு அமைப்பு, 1.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தது. சர்வதேச நீதிமன்றத்தில் நாடுகள் மட்டுமே வழக்குத் தொடர முடியும். மியன்மாரில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இடம் பெற்ற இனப்படுகொலையை சுட்டிக் காட்டி, கம்பியா, சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

எங்களது தலைமுறையில், எங்களுடைய கண்களுக்கு முன்னால் இடம் பெற்ற இனப்படுகொலைக்கு நீதியை பெற முடியாதவர்களாக இருப்பதை எண்ணி, நாங்கள் வெட்கப்பட வேண்டியிருக்கின்றது என்றார், கம்பியாவின் நீதியமைச்சர்.கு

இந்த விடயம் தொடர்பில் குறிப்பிடுவதற்கு ஒரு காரணமுண்டு. இவ்வாறான பின்னணியை கொண்டிருக்கும் காம்பியா, சிறிலங்கா விடயத்தில், வாக்களிப்பை தவிர்த்திருக்கின்றது. நீதியை மட்டுமே கருத்தில் கொள்ளும் ஒரு நாடு என்றால், காம்பியா, தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டும் பிரேரணையை ஆதரித்தல்லவா இருக்க வேண்டும் ஆனால் காம்பியா அவ்வாறு வாக்களிக்கவில்லை. ஏன்?

நாடுகள் ஒவ்வொன்றினதும் நலன்கள் எவ்வாறு பேரவையின் முடிவுகளோடு மோதுகின்றன என்பதை புரிந்து கொள்வதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். நீதியை மட்டும் நிறுத்துப் பார்த்து நாடுகளின் முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. ரோகிங்கியா முஸ்லிம்கள் விடயத்தில் அநீதி இடம்பெற்றிருப்பதாக கூறும் கம்பியா, தமிழ் மக்களின் விடயத்தில் அதனை பின்பற்றவில்லை.

ஏனென்றால் கம்பியா, சிறிலங்கா விடயத்தில் ஆர்வம் காண்பிப்பதால், அதற்கு இலாபம் இல்லை. ஆனால் ஒரு விடயத்தில் கம்பியா சிக்குண்டு விட்டது. அதாவது, பேரவையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கொண்டு வரப்படும் பிரேரணைகளுக்கு எதிராக வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஊடான தீர்மானங்களில் எவ்வாறான விடயங்கள் வரவேண்டுமென்பதை, நாடுகளின் நலன்களே தீர்மானிக்கும். தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் அனுப்பும் கடிதங்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுமென்று எதிர்பார்த்தால், அது எதிர்பார்ப்பவர்களின் தவறாகும்.


2012இல், அமெரிக்க ஆதரவோடு கொண்டு வரப்பட்ட பிரேரணைகளிலிருந்து, இன்றுவரையில் இடம் பெற்ற விடயங்களை கவனமாக பரிசீலித்தால், ஒரு விடயத்தை நீங்கள் புரிந்து கொள்ளலாம். சிறிலங்காவின் இறுதி யுத்தத்தின் போது, இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டுமென்பதே பிரேரணையின் உள்ளடக்கமாகும். இதனை அப்போதிருந்த மகிந்த ராஜபக்ச மறுத்திருந்தார். இதனால் பிரேரணைகள் தொடர்ந்தன. ஆனால் இதன் அடிப்படையை புரிந்து கொள்வதில் நமது பக்கத்தில் சரியான புரிதல் இருந்ததா என்பது தான் கேள்வி.

சிறிலங்காவை பாரதூரமாக தனிமைப்படுத்தி விடக் கூடாதென்னும் கரிசனை இந்தப் பிரேரணைகளின் உள்ளடக்கத்தில் இருக்கின்றது. இதன் காரணமாகத் தான், தமிழர்கள் என்ன தான் கத்தினாலும் அதனை எவருமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

சிறிலங்காவை அதிகம் தனிமைப்படுத்தினால், சிங்களவர்கள் அதிகம் சீனாவின் பக்கமாக சாய்ந்து விடுவார்கள் என்னும் பார்வை மேற்குலகிடமும், இந்தியாவிடமும் உண்டு. இது உடனடியாக இந்தியாவிற்கே பாரதூரமான பிரச்சினையாகும்.

இதன் காரணமாகவே பிரேரணைகளின் போது, இந்தியா நடுநிலை வகிக்கின்றது. நடுநிலையின் ஊடாக, சிங்களவர்களை அதிகம் தள்ளி விடாமலும் அதே வேளை, தமிழ் மக்களின் மீதான கரிசனையையும் காப்பாற்றிக் கொள்ளும் உக்தியையே இந்தியா பின்பற்றி

கட்டுரையாளர்: தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



வருகின்றது. மேலும், இந்தியா நடுநிலை வகிப்பதால், பிரேரணை தோல்வியுறப் போவதில்லை. ஏனெனில் இந்தப் பிரேரணைக்கு மேற்குலக நாடுகள் ஆதரவளிக்கும் வரையில், இது தொடர்ந்தும் வெற்றிப் பெற்றுக் கொண்டேயிருக்கும்.

அமெரிக்கா பேரவையிலிருந்து வெளியேறினாலும் கூட, ஏனைய நாடுகளின் ஆதரவுடன் இந்தப் பிரேரணை வெற்றி பெறும் கொழும்மை அதிகம் தனிமைப்படுத்தி விடக் கூடாதென்னும் பார்வை இருக்கும் வரையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்கள் இப்படித்தான் இருக்கும். அதே வேளை, மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கை காட்டமாக இருக்கும். மேற்குல நாடுகளை, முக்கியமாக அமெரிக்காவை பொறுத்தவரையில் ஆட்சி மாற்றங்களின் மூலம் வருகின்ற புதிய அரசாங்கத்தை கொண்டு, சில விடயங்களை செய்துகொள்ள முடியுமென்னும் அடிப்படையில் தான் அதன் இலக்குகளை தீர்மானிக்கின்றது. இந்தியாவை பொறுத்தவரையில், இந்திய-இலங்கை ஒப்பந்தமே அதன் துரப்புச் சீட்டாக இருக்கும். இதில் எந்தவொரு பெரிய மாற்றங்களும் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அவர்களுக்கு தேவையெனின் நிச்சயம் மாற்றங்கள் இடம் பெறும். இந்த விடயங்களை புரிந்து கொண்டால் ஜெனிவா தொடர்பில் அதிகம் குழும்ப வேண்டியதில்லை.

# இன்னொரு ஜெனிவாத் தோல்வி

(18ம் பக்கத் தொடர்ச்சி) அவற்றில் எரித்ரியா மட்டும், இலங்கைக்கு ஆதரவளித்தது. பெனின், கமரூன், போன்ற நாடுகள் முன்னர் இலங்கைக்கு எதிராக வாக்களித்த போதும், இம்முறை நடுநிலை வகித்தன. அத்துடன், கம்பியா, இந்தியா, கசகஸ்தான், மலேசியா, கட்டார், சோமாலியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பன, வாக்கெடுப்பில் இருந்து விலகியிருந்தன.

இவற்றுடன் வழக்கமாகவே வாக்கெடுப்பை புறக்கணிக்கும், ஜப்பான், இந்தோனேசியா, பெனின், பிரேசில், ஐவரிகோஸ்ட், காபோன், லிபியா, நமீபியா, செனகல், சூடான் ஆகிய நாடுகளும், வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில், தீர்மானத்துக்கு ஆதரவான வாக்குகள், 20 ஆக குறைந்தாலும், பெரும்பான்மை பலத்துடன் அதனை நிறைவேற்றியிருக்கின்றன அனுசரணை நாடுகள்.

இந்த முறை இலங்கைக்கு ஆபிரிக்க நாடுகள் கைகொடுக்கவில்லை. இஸ்லாமிய நாடுகளும் வாக்கெடுப்பில் இருந்து ஒதுங்கிக் கொண்டன. இவற்றின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளில் இலங்கை தோல்வியடைந்திருக்கிறது. பாகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் தவிர, வேறெந்த இஸ்லாமிய நாடும் இலங்கையை ஆதரிக்கவில்லை.

சர்வதேச அரங்கில் இலங்கையின் இராஜதந்திரம் தோல்வியை நோக்கிப் பயணம் செய்கிறது. இதனை இந்த வாக்கெடுப்பு துலாம்பரமாக காட்டியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துசார இந்துனில் குறிப்பிட்டது போல, இதனை சர்வதேச சதித் திட்டம் என்று கூற முடியாது. இந்த நிலைமையை ஏற்படுத்தியது ராஜபக்ஷவினர் உள்ளிட்ட இலங்கையின் ஆட்சியாளர்கள் தான்.

# காங்கிரஸின் எதிர்காலம்?

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

தமிழகம் முழுவதும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நடத்தும் பேரணிக்கு அனுமதி அளிப்பதா? வேண்டாமா? என்ற விவாதமும், காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம், ராகுல்காந்தி மேற்கொள்ளும் இந்திய ஒற்றுமை பயணத்தில் இருக்கிறதா? அல்லது தலைவர் தேர்தல் இருக்கிறதா? என்கிற விவாதமும் தான் தற்போது அனல் பறக்க நடைபெற்று வருகிறது.

மின்கட்டண உயர்வு குறித்து தங்களுடைய வழக்கமான எதிர்ப்புகளை பதிவு செய்துவிட்டு பா.ஜ.க- அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தங்களுடைய அடுத்தக் கட்ட அரசியல் நடவடிக்கைகளைக் கவனிக்கத் தொடங்கி விட்டன.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, இந்திய அரசால் மூன்று முறை தடை செய்யப்பட்ட அமைப்பாகும். அது, தேசியத்தை மட்டுமே தன்னுடைய கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அதனால் அந்த அமைப்பிற்கு தமிழகத்தில் பேரணி நடத்த அனுமதி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருபவர்களும் உள்ளனர்.

ஆனால் அந்த அமைப்பினர் திரிபுரா மாநிலத்தில் பேரணியாக சென்றபோது, மாற்று மதத்தினரின் வணிக நிலையங்களை சூறையாடியும், தீயிட்டு கொளுத்தியும் வன்முறையில் ஈடுபட்டனர். இது போன்ற நிகழ்வு தமிழகத்திலும் நடக்கக்கூடும் என்று ஜனநாயக சக்திகள் கரிசனை செலுத்தியுள்ளனர்.

இதனால், தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு பேரணி நடத்த அனுமதி அளிக்கக்கூடாது என்று விடுதலை சிறுத்தைகள், நாம் தமிழர் இயக்கம் உள்ளிட்ட அரசியல் இயக்கங்கள் எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றன.

அதேதருணத்தில் தமிழகத்தில் இயங்கி வந்த 'பொப்புலர் ப்ரண்ட் ஒப் இந்தியா' என்ற இஸ்லாமிய அமைப்பிற்கு மத்திய அரசு ஐந்தாண்டு காலம் தடை விதித்திருக்கிறது.

இதனால் அந்த அமைப்பின் உறுப்பினர்கள், நிர்வாகிகள், ஆதரவாளர்கள், விசுவாசிகள் எனப் பலரும் கடும் கொந்தளிப்பிலும், ஆத்திரத்திலும் இருக்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, திட்டமிட்டே உருவாக்கியிருக்கிறது என்றும், இதன் மூலம் தமிழகத்தில் பேரணி நடத்துவதற்கான அனுமதியை மறைமுக நெருக்கடியின் பெயரில் பெற்றிருப்பதாக தெரிய வருகின்றது.

ஏனெனில் ஆர்.எஸ்.எஸ். நடத்தும் பேரணியில் வன்முறைகள் திட்டமிட்டோ அல்லது திட்டமிடப்படாமலோ நடைபெற்றால், அதற்கு தடை செய்யப்பட்ட பொப்புலர் ப்ரண்ட் ஒஃப் இந்தியா அமைப்பினர் தான் காரணம் என்று அவர்கள் மீது பழி சுமத்தி, தங்களின் எண்ணத்தை தமிழகத்தில் நிறைவேற்றி விடலாமென திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றது.

இதன் காரணமாகத் தான் ஒக்டோபர் இரண்டாம் திகதியன்று தமிழகத்தில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் பேரணி நடத்த அனுமதி கேட்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு தமிழக காவல்துறை சார்பில் அனுமதி மறுக்கப்பட்டது. இதை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ்.அமைப்பு சென்னை உயர் நீதிமன்றத்தை நாட, உயர்நீதிமன்றமும் நவம்பர் 6ஆம் திகதியன்று பேரணியை நடத்தலாம் என்றும், அனுமதி குறித்து தமிழக காவல்துறை ஒக்டோபர் 31ஆம் திகதிக்குள் தங்களுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் நடத்தும் பேரணி அமைதியான முறையிலும் மக்கள் நலன் சார்ந்த முறையில் நடத்து





கிறோம் என்பதில் அவர்கள் உறுதிபட இருந்தால் பேரணி செல்லும் பாதையை தெளிவாக காவல் துறையிடம் தெரிவித்து விட்டு, பேரணிக்கு அனுமதி பெற வேண்டியது தானே என்ற ஜனநாயகத்தை நேசிக்கும் சக்திகளின் கோரிக்கையை ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் ஏற்பதாக இல்லை.

பேரணி நடைபெற்றால் ஏதேனும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தான் அந்த அமைப்பினர் திட்டமிடுகிறார்கள். அது அரசியல் ரீதியாக சாதகமான பலனை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். அதற்கு தமிழக ஆட்சியாளர்களும், திராவிட சிந்தனையிலும், திராவிட சித்தாந்தத்திலும் நம்பிக்கைக் கொண்டிருக்கும் அரசியல் கட்சியினர் மறுப்பு தெரிவிப்பதுடன், வெளிப்படைத் தன்மையுடன் பேரணி நடைபெற வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கிறார்கள்.

இதனால் நவம்பர் 6 ஆம் திகதியன்று, ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பேரணி, தமிழக அரசு மற்றும் நீதிமன்றத்தின் ஆணையைப் பெற்று, முழுக்க கண்காணிப்பு கமராவின் உதவியுடன் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகனே அதிகம் என்று ஆளுங்கட்சியினர் தெரிவிக்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பு நடத்தும் பேரணி குறித்த எச்சரிக்கை அரசியலில் திராவிட கட்சிகளும் ஈடுபட்டிருக்கிறது. இது தொடர்பாக தமிழக முதல்வரும், தி.மு.க.வின் தலைவருமான ஸ்டாலின், அண்மையில் கட்சியினருக்கும், அமைச்சர்களுக்கும் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதனிடயே தமிழகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்திய ஒற்றுமைப் பயணம் இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சியினராலும் குறைத்து மதிப்பிடப்பட்டது.

ஆனால் தேசிய கட்சிகளின் எதிர்பார்ப்பிற்கு மாறாக, ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமைப் பயணத்திற்கு வரவேற்பு தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது என்று கள ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மைசூரில் கொட்டும் மழையிலும் ராகுல் காந்தியின் பேச்சும், அவரது நடைபயணமும் அசலாகவே பிரதமர் மோடிக்கு சவால் விடுக்கும் வகையில் அமைந்திருந்தது.

அதே தருணத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் மல்லிகார்ஜுன கார்க்கே மற்றும் சசி தரூர் இடையே போட்டி இருக்குமா? தேர்தல் நடைபெறுமா? என்பது இன்றைய தினத்தில் அதிகாரப்பூர்வமாக தெரிய வரும். சசி தரூருக்கு தென்னகத்தில் ஓரளவு ஆதரவு கிடைக்கும் என்றும் ஆனால் சோனியா காந்தியின் ஆதரவு பெற்ற மல்லிகார்ஜுன் கார்கே தலைவராக வெற்றி பெறுவதற்கான சாத்தியம் அதிகம் என்று கட்சியினர் தெரிவிக்கிறார்கள்.

கட்சியின் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ராகுல் காந்தியின் முன்னெடுக்கும் 'இந்திய ஒற்றுமைப் பயணத்தின்' பலனை காங்கிரஸ் கட்சி அறுவடை செய்யுமா? அல்லது அதன் புதிய தலைவருக்கு நேர்மறையான பலனை அளிக்குமா? என்பது கேள்விகளாகவே உள்ளது.

இருப்பினும் 2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல், விரைவில் நடைபெறவிருக்கும் குஜராத் மற்றும் இமாச்சல் பிரதேச மாநில சட்டப்பேரவை தேர்தலில் ராகுல் காந்தியின் பயணம் காங்கிரஸ் கட்சிக்கு உத்வேகத்தை அளிப்பதற்கு வய்ப்புக்கள் உள்ளன.

காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை அக்கட்சிக்கு தேசிய அளவில் பா.ஜ.க. என்பதுதான் பொதுவான, சித்தாந்த ரீதியிலான எதிர்க் கட்சியாக இருந்து வந்தது. ஆனால் தற்போது டெல்லி, பஞ்சாப், கோவா ஆகிய மாநிலங்களில் அரசியல் ரீதியாக வலிமை பெற்றிருக்கும் ஆம் ஆத்மி கட்சியும் சவாலாக திகழ்கிறது.

இந்தக் கட்சிக்கான வாக்குகளும், காங்கிரஸ் கட்சியின் வாக்குகளாகவே இருப்பது தான் அளவிட முடியாத சோகம். இருப்பினும் ராகுல் காந்தியும், காங்கிரஸ் கட்சிக்கு புதிதாக தெரிவாகும் தலைவரும் கட்சியை வலிமைப்படுத்தி, வலுவுள்ள எதிர்கட்சியாகவும், எதிர்க் கட்சிகளை ஒருங்கிணைத்து பா.ஜ.க.வை வீழ்த்துவதற்கான முயற்சியை மேற்கொள்ளும் கட்சியாகவும் திகழும்

காங்கிரஸ் கட்சி தலைவரை தேர்ந்தெடுத்தாலும், எடுக்காவிட்டாலும்.. அக்கட்சியின் தலைவர் இந்திய ஒற்றுமை பயணத்தை மேற்கொண்டாலும், மேற்கொள்ளா விட்டாலும்... தமிழகத்தில் உள்ள மக்கள், தங்களுடைய வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை அரசு உருவாக்க வேண்டும் என்றே மக்கள் கருதுகின்றார்கள்.

# ஜெனிவாத் தீர்மானம் 2022

(15ம் பக்கத் தொடர்ச்சி) இதுவரை சாதித்தவை என்ன? மிகக்குறிப்பாக அந்த விடயத்தை நோக்கி அவர்கள் கட்டியெழுப்பி வைத்திருக்கும் கட்டமைப்புகள் எத்தனை? பன்னாட்டு நீதிமன்றத்தை நோக்கிச் செல்லும் வழியில் கடந்த 20 மாத காலத்தில் எதுவரை முன்னேறி இருக்கிறோம் என்பதனை மூன்று கட்சிகளும் தமிழ்மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக்கூற வேண்டும் என்று கேட்கும் மேற்படி கட்சிகள் தமது வாக்குறுதிகளுக்கும் அதை நம்பும் தமது மக்களுக்கும் பொறுப்பு கூறவேண்டும்.

றொரன்ரோ பல்கலைக்கழக மாணவர்களின் கவனத்திற்கு!

## கலாநிதி சின்னத்துரை விஜயகுமார் புலமைப்பரிசில் அறிவித்தல்



கணித மேதையும், கணணித் தமிழ் எழுத்துக்களின் பிதாமகனும், றொரன்ரோ பல்கலைக்கழக பேராசிரியராகவும் விளங்கிய அமரர் கலாநிதி சின்னத்துரை விஜயகுமார் அவர்கள் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ள தகுதிபெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பின்வரும் தகைமைகளைக் கொண்ட மாணவர்கள் இப்புலமைப் பரிசிலிற்கு விண்ணப்பிக்கலாம்:

1. றொரன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழை ஒரு கற்கை நெறியாகக் கொண்ட, தமிழ் சமுகத்தில் பொதுவேலைகளில் பங்குகொண்டவர்கள்
2. பல்கலைக்கழக படிப்புக்காக நிதித் தேவையில் உள்ளவர்கள்

## Dr. Sinnathurai Vijayakumar Scholarship

To be awarded to an undergraduate student based on financial need. Preference given to students studying Tamil studies at U of T or students who are active in Tamil communities.

Recipient must:
- be a Canadian citizen/permanent resident and resident of Ontario;
- be studying Tamil studies at UofT or students who are active in Tamil Communities;
- demonstrate both academic achievement and financial need.

**Deadline to Apply: 01-Nov-22**


**https://future.utoronto.ca/scholarships/dr-sinnathurai-vijayakumar-scholarship/**

# Nathaswara Thavil Music Of Global Inc.

# நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு

25th ANNIVERSARY

## 25 வது ஆண்டு வெள்ளி விழா


தவில் வித்துவான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்


நாதஸ்வர வித்துவான் கலைமாமணி மாம்பழம் திரு M.K.S சிவா அவர்கள்


தவில் வித்துவான் லயஞானதிலகம் கோவலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்கள்







**இடம்: RICHMOND HILL HINDU TEMPLE**
**10865 BAYVIEW AVENUE, RICHMOND HILL,**
**(BAYVIEW AND ELGINMILLS)**
**(அனுமதி இலவசம்)**



**காலம்: 16 October 2022 ஞாயிற்றுக்கிழமை**

கோவிலில் காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பம், காலையிலும் மாலையிலும் கோவிலில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.
மாலை 5:00 மணிக்கு ஆலய மண்டபத்தில் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

நாதஸ்வர, தவில் இசை சர்வதேச அமைப்பு 25ஆவது வருட வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கிறது. இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி காலை ரிச்மண்ட்ஹில் பிள்ளையார் கோவிலில் 1008 சங்காபிஷேகத்துடன் விழா ஆரம்பமாகிறது. காலையிலும் நாதஸ்வர, தவில் கச்சேரி நடைபெறும். அத்துடன் பாட்டுக் கச்சேரி, மிருதங்கக் கச்சேரி, வயலின் கச்சேரி, புல்லாங்குழல் கச்சேரி, பரத நாட்டியம் அனைத்தும் காலையில் நடைபெற உள்ளது. மாலையில் ஆலய மண்டபத்தில் இந்தியாவில் இருந்து சிறப்பாக வருகைதரும் விசேஷ நாதஸ்வர தவில் கச்சேரி இடம்பெறவுள்ளது. நாதஸ்வர வித்வான் கலைமாமணி மாம்பலம் திரு. M.K.S. சிவா அவர்கள், தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G. முத்துக்குமாரசாமி அவர்கள் மற்றும் தவில் வித்வான் கோவளம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்களும் இணைந்து வழங்கும் சிறப்புக்கச்சேரியும் அத்துடன் இந்தியாவில் இருந்து வருகைதந்திருக்கும் நாதஸ்வர, தவில் வித்துவன்களின் கச்சேரியும், ரொறன்ரோ நாதஸ்வர, தவில் வித்துவான்களின் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. அனைத்து குருமார்களையும் அனைத்து ஆலய நிர்வாக சபையினரையும் நாதஸ்வர தவில் கலைஞர்களையும் மற்றும் ரசிக பெருமக்களையும் வருக வருக என வரவேற்கிறது நாதஸ்வர, தவில் இசை சர்வதேச அமைப்பு.



**விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு**
**DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850**
**Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org**


ஊடக அனுசரணை
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook

Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! ஆக்க பூர்வமான யோசனைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது. தகப்பனாருடன் வீண் தகராறு ஏற்படலாம் கவனம் தேவை.



ரிஷபராசி அன்பர்களே! நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற் கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழி செய்யும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்வது நல்லது



மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடு மாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். உத்யோகத்தில் அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சக ஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! எதிர் காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். கணவன், மனைவிக்கிடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.



சிம்மராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும்.



கன்னிராசி அன்பர்களே! செயல் திறன் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். குற்றச்சாட்டுகளு க்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும் பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக் கிடையே தேவையற்ற மன வருத்தம் உண்டாகலாம்.




துலாம்ராசி அன்பர்களே! நீங்கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப் பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். வியாபாரத்தில் புதுமையை செய்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம். குடும்பத்தில் மனைவியுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும்.




விருச்சிகராசி அன்பர்களே! கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பர். கணவன், மனைவிக் கிடையே இருந்த மனவருத்தம் குறையும்.






தனுசுராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச் சாட்டுக்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறர் கூறும் ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.



மகரராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயணங்கள் சாதகமான பலனை தரும். உத்யோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பர்



கும்பராசி அன்பர்களே! பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் எளிதாக நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். பிரச்னைகளை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.



மீனராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பண வரத்து திருப்தி தரும். உத்யோகத்தில் மேலதிகாரிகள் சொல்லியபடி நடப்பது நன்மை தரும். புதிய வேலைக்கு முயற்சி செய்வது நன்மை தரும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

## தமிழர்களைக் கடத்தி முதலைக்கு இரை.....

(5ம் பக்கத் தொடர்ச்சீ) கடந்த 5ஆம் திகதி முற்பகல் 11.00 மணியளவில் அவரது வீட்டில் தங்கியிருந்தபோது கடத்திச் செல்லப்பட்டு, தாக்கப்பட்டு பட்டியா சந்தி பகுதியில் விடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குண்டர் கும்பல்அத்துல மதநாயக்கவின் கண்களை துணியால் கட்டி வாகனத்தில் ஏற்றி அவரது ஒரு கை முறியும் வரை அடித்துள்ளது. அவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உடைந்த கைக்கு சத்திரசிகிச்சை செய்து தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

அத்துல மதநாயக்கவின் மனைவி, இந்தச் சம்பவம் குறித்து ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், சம்பவத்தன்று, மதியம்பதினொரு மணியளவில், நாங்கள் குழந்தைகளுடன் வீட்டில் இருந்தபோது, எங்கள் வீட்டுக்கு நான்கு அந்நியர்கள் வந்தனர். கணவனை அறைக்கு இழுத்துச் சென்று மார்பில் அடித்தனர். அப்போது மூத்த மகன் படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்தான். மகனை அறைக்கு வெளியே அனுப்பினர். அதன்பின், கணவனின் தலையில் துப்பாக்கியை வைத்து இழுத்துச் சென்றனர். வந்தவர்களில் இருவர் எங்களுடன் வீட்டில் தங்கினர். என் மூத்த மகளின் தொலை பேசியையும் பறித்தனர். அதனால் பொலிசுக்கு தகவல் வழங்க முடியவில்லை. வாகனத்தில் கணவரைக் கொண்டு சென்று, அவரை கடுமையாகதாக்கி கையை உடைத்து, சந்தியில் விட்டுள்ளனர். கணவர் இறக்கி விடப்பட்டதும், வீட்டிலிருந்த இருவரும் வெளியேறினர். இச் சம்பவம் தொடர்பாக கணவர் பேலியகொடை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். ஏழெட்டு பேர் சேர்ந்து தன்னை வாகனத்தில் ஏற்றியதாகவும், கண்களை கறுப்புத் துணியால் கட்டி அடித்ததாகவும் கணவர் கூறினார்–என்றார்.

இந்த முதலை வழக்கில்தொடர்புடைய இருவருக்கும்பல தடவைகள் தொலைபேசி அழைப்புகள் மூலம் கொலைமிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடத்தப்பட்டதன் பின்னர் அத்துல மதநாயக்க பேலியகொடை பொலிஸாருக்குச் சென்று சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.தனது உயிருக்கு பாதுகாப்பு வழங்காவிட்டால் அடுத்த தவணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது எனவும், தன்னை கடத்த வந்தவர்கள் தன்னியக்க துப்பாக்கிகளை வைத்திருந்ததாகவும், இந்த வழக்கில் தொடர்புடையமற்றைய நபரான சரத் எங்கிருக்கிறார் என தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தியதாகவும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். தனக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், தனது உயிரை உறுதிப்படுத்துமாறும் நீதிமன்றில் கோரிக்கைவிடுத்துள்ளதாகவும் அத்துல மதநாயக்க தெரிவித்துள்ளார்.






## இந்தியாவில் பல முக்கிய சந்திப்புக்களை நடத்தி

(3ம் பக்கத் தொடர்ச்சி) திருத்தச் சட்டத்தைத் தாண்டி, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையிலான அரசியற் தீர்வுக்கு, இந்தியா பக்க பலமாக இருக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு, போராளிகளும், தமிழ் மக்களும் சுதந்திரமாகச் செயற்படக் கூடிய நிலைமை உருவாவதற்கு, இந்தியா உதவ வேண்டும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், ஏனைய வல்லரசுகளின் ஆதிக்கத்தை, போராளிகள் என்ற ரீதியில், நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அந்தவகையில், இந்தியா அதற்குரிய ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

போராட்ட ரீதியில், தமிழ் மக்களுக்குத் தலைமை வகித்த போராளிகள், ஜனநாய நீரோட்டதிலும் மக்களுக்கான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு, இந்தியா பூ ரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். என பல விடயங்கள் தொடர்பில், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் .கதிர் விளக்கியுள்ளார். இந்த சந்திப்பில், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் .கதிர், ஊடகப் பேச்சாளர் க.துளசி, உப தலைவர் என்.நகுலேஸ், மட்டக்களப்பு அம்பாறை இணைப்பாளர் தீபன், இளைஞர் அணி பொறுப்பாளர் நெல்சன் ஆகியோர் பங்கேற்றனர்.

வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

வீடு HOME

வாகனம் AUTO

மோட்டர் சைக்கிள் MOTOR CYCLE

படகு BOAT

கனரக வாகனம் TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
**THUSHANTHAN RAVINDRAN**
**647-401-2653**



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI
THIRUKESWARAN
LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC
KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


அபாயம்
உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு
நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி
உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும்
தேவை எங்களுக்கு உண்டு என்பதை
இங்கு காணுங்கள்.
புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?
In Canada
Breast Cancer 1 woman in 8
Prostate Cancer 1 man in 7
Heart disease 1 person in 4
Stroke (CVA) 1 person in 20
Fortunately, more people are surviving these afflictions and living longer lives.
Survival Rate
Cancer 60%
Heart Attack 85%
Stroke 1 person in 4
Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%
Industry critical illness claim breakdown
Heart attack: 13%
Other: 16%
Stroke: 5%
Coronary surgery: 3%
Cancer: 63%
iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.